Registered as a Newspaper
12 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 20 (04.03.94) வெள்ளிக்கிழமை ஓசை 14

## குடும்ப அட்டை சரிசெய்ய காலஎல்லை நீடிப்பு

பொதுமக்கள் அனைவரும் தம்மிடமுள்ள குடும்பப் பதிவு அட்டைகளில் குடும்பத்தலைவர் முழுப்பெயர், வதிவிட முகவரி, குடும்ப உறுப்பினர்கள் பெயர்கள், பிறந்த திகதி, தொழில், தொழில் இடம் என்பன சரியான முழுமையான விபரங்களைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதுடன், குடும்பத் தலைவரின் பெயர் முழுமையானதாக இருப்பதுடன் தற்போதைய வதிவிட முகவரி பூரணமாக (11ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே சமாதான முயற்சிக்கு விடுதலைப் புலிகள் ஆதரவு!

## வெளிவிவகார ராஜதந்திரி விரைவில் யாழ். வருவார்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடங்கி வைப்பதற்கு நோர்வே அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் ஆதரவு வழங்கியுள்ளது. இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு நோர்வே வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரியான திரு. ஆர்னே பிஜோர்ட் ரோப்ட் அடுத்த மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் வர இருக்கிறார்.

ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்கி, சிங்கள அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் மத்தியில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நோர்வே அரசாங்கம் முயற்சிகளை எடுத்து வருகிறது. இது சம்பந்தமாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ராஜதந்திரி ஒருவரையும் நோர்வே அரசு நியமித்திருக்கிறது. மூத்த அரசியல்வாதியும், ராஜதந்திரியும், 'உலக நோக்கு' எனப்படும் சர்வதேச நிறுவனத்தின் தலைவருமான திரு. ஆர்னே பிஜோர்ட் ரோப்ட் இவ் விவகாரத்தை கையாள நியமிக்கப்பட்டிருக்கிறார். சமீபத்தில் 'ஐலண்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் நோர்வே அரசின் மத்தியத்துவ முயற்சி பற்றி குறிப்பிட்டிருக்கிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

திரு. ஆர்னே அடுத்தமாதம் ஆரம்பத்தில் பெரும்பாலும் ஏப்ரல் முதலாம் அல்லது இரண்டாம் திகதி யாழ்ப்பாணம் வந்து புலிகளைச் சந்திப்பார். நோர்வேயின் சமரச முயற்சிக்கு விடுதலைப்புலிகள் ஆதரவு அளித்ததுடன் திரு. ஆர்னே யாழ்ப்பாணம் வருவதற்கும் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிகிறது.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின்

## பெண்கள் நாள் போட்டி முடிவுகள் வெளியாகின

எதிர்வரும் எட்டாம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் நடாத்தப்பட்ட இலக்கிய, ஓவியப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

சிறுகதை, கவிதை, ஓவியம் ஆகியவற்றிற்கான போட்டிகளில் (12ஆம் பக்கம்பார்க்க)

## 6000 கிலோ மலத்தியோன் உடன் எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் அவசர தேவைகளுக்காக ஆறாயிரம் கிலோ மலத்தியோன் கொழும்பிலிருந்து எடுத்துவரப்படவிருக்கிறது.

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக மலேரியா நோயின் தாக்கம் அதிகரித்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த ஜனாதிபதி தேர்தலில் விஜேதுங்கவின் வெற்றிநிச்சயமில்லை

பி. பி. ஸி. கூறுகிறது

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் டி. பி. விஜேதுங்கா வெற்றிபெறுவது அவ்வளவு நிச்சயம் இல்லை என பி. பி. ஸி. குறிப்பிட்டது.

அரசியல் ஆய்வாளர்களின் கணிப்புகளை மேற்கோள் காட்டி இவ்வாறு தெரிவித்த பி. பி. ஸி,

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் முக்கிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். ஜனாதிபதித் தேர்தலுக்குத் தங்களைத் தயார் செய்துகொள்ள பிரதான கட்சிகள் பயன்படுத்திக் கொண்டுள்ள அணுகுமுறை இந்தத் தேர்தல் என்று மேலும் தெரிவித்தது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இனங்களுக்கிடையிலான வேறுபாடுகளைத் தமக்குச் சாதகமாக்குவதன் மூலம் பெரும்பான்மைச் சிங்கள மக்களைத் தன்பக்கம் ஈர்க்கும் நோக்குடன் நடந்து கொள்கிறார்.

நடந்துமுடிந்த இந்தத் தேர்தல் பயன்படுத்தப்பட்ட இனவாதம் இன்னும் மூன்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி குடியிருப்புகள் மீது இரவுநேர விமானத் தாக்குதல்

வடமராட்சி மக்கள் குடியிருப்புகள்மீது சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் இரவுநேரங்களில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இப்பகுதிக்கு வந்த குண்டுவீச்சு விமானங்கள் குடியிருப்புகள்மீது அடுத்தடுத்து குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன.

இப்பகுதிக்கு வந்த குண்டுவீச்சு விமானங்கள் தொண்டமனாறு, மற்றும் மண்டான் பகுதிகள்மீது குண்டுத்தாக்குதலை மேற்கொண்டன.

தொண்டமனாறில் வீசிய குண்டுகள் கடலில் விழுந்து வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது. எனினும் இப்பகுதி மக்கள் இத் தாக்குதலினால் பெரும் பதற்றநிலையடைந்தனர். (யோ)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

# சபாநாயகர் முகம்மது நல்லெண்ண விஜயம் யாழ்ப்பாணம் வருவதற்கு புலிகள் அனுமதி

நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு, சிறிலங்காவின் பாராளுமன்ற சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது அடுத்தமாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். சபாநாயகருடன் அவரது தனிச் செயலரும், இலங்கைக்கான மனித உரிமைக் குழுத் தலைவரும் வரவிருக்கிறார்கள்.

இந்த நல்லெண்ண தூதுக்குழுவினர் பேச்சுவார்த்தைக்கான சமரச சூழலை உருவாக்குவது குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தவிருக்கின்ற சபாநாயகர் யாழ்ப்பாணத்தில் இரண்டு அல்லது மூன்று தினங்கள் வரை தங்கியிருப்பார்.

கடந்த ஆறுமாதங்களுக்கு மேலாக சபாநாயகர் முகம்மது யாழ்ப்பாணம் வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். தற்பொழுது, சபாநாயகர் யாழ்ப்பாணம் வந்து சமாதானத்திற்கான நல்லெண்ண சூழல் ஒன்றை உருவாக்கும் முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதேவேளை, 1990 இல் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தபோது யாழ்ப்பாணம் வந்து சென்ற அமைச்சர் ஹமீத்தின் பின்னர், சிறிலங்கா அரசாங்கத்தில் உயர் நிலை பதவி வகிக்கும் ஒருவர் யாழ்ப்பாணம் வருவது இதுவே முதற்தடவையாகும்.

## வரி விளம்பரம்

**''அகிலன்ஸ்''**

சகல விதமான வாகனங்களின் இலக்கத் தகடுகளும் அழகிய முறையில் எழுதிக் கொடுப்பவர் (மஞ்சள்+கறுப்பு) எழுத்தோவியர் ''அகிலன்ஸ்'' 426 கண்டி வீதி, அரியாலை. (7651)

**தவறிவிட்டது**

26-02-94 அன்று பாஷையூர் - கொழும்புத்துறைக்கிடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (7655)

**''நீரிழிவுநோய்''**

நீரிழிவு நோயால் தவிப்போர் உணவாகக்கொள்ளச் சிறந்த புதினாக்கீரை, கரிசலாங்கண்ணி. துரிதமாகப்படர்ந்து வளருபவை. கன்று ஒன்று ரூ. 10/- ''மில்க்வைற்'' (சி-8747)

**சிறந்த விவசாயத் துணைச் சாதனங்கள்**

நீமியாஉரம், சக்தி இயற்கைப்பசளை, மார்க்கோசின், பூச்சிகொல்லி, விவசாயம் கதிவிட வேளாண்மைக்குச் சிறந்த, இக்கனமான அமோக விளைச்சலுக்கு அவசியமான சாதனங்கள். யாழ். மின்சார நிலையவீதி, ''வங்கெம்'' தாபனத்தில் விற்பனையாகின்றன. -''மில்க்வைற்'' (சி-8755)

**கலந்துரையாடல்**

இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபன காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை தற்கால நிலைமை பற்றி ஆராயும் பொருட்டு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நாளை காலை 9.00 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. சகல ஊழியர்களும் இதில் பங்குபற்றுமாறு தொழிற்சாலை ஆவணி உத்தியோகத்தர் கோருகிறார்.

**கலைக்கதம்பம்**

யாழ். விஞ்ஞான சமிகம் நாளை மாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் கலைக்கதம்பம் ஒன்றை நடத்தவுள்ளது. இராமநாதன் நுண்கலைப் பிரிவு இதற்கான நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தவுள்ளது.

**கலந்துரையாடல்**

தென்மராட்சி பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுடனான கலந்துரையாடல் நிகழ்வொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலுக்கு தென்மராட்சி பிரிவிலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகசபை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொள்கின்றது

**வருடாந்த பொதுக்கூட்டம்**

தென்மராட்சி திவக உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தென்மராட்சி திவக பிரிவிலுள்ள உதைபந்தாட்டக் கழகங்களிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதியை இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## விசேட அறிவித்தல்

**பொலிகண்டி அருள்மிகு கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்**

தற்போது தர்மகர்த்தா சபையின்கீழ் இயங்கி வருகிறது. இவ்வாலயத்தில் திருப்பணிகளோ அன்றி அன்பளிப்புக்களோ, அல்லது வேறு வகைகளில் உதவி செய்ய விரும்புவோர் மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையோடு தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
தர்மகர்த்தா சபை,
கந்தவனம் தேவஸ்தானம்,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

(7658)

## யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப்பணி மகாநாடு

**10. தேசியமேய்ப்புப்பணி மகாநாட்டிற்கு யாழ். மறை மாவட்டத்தின் பங்களிப்பு என்ன?**

(1) பல வினாக்கொத்துக்கள் யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க மக்களிடம் நிரப்பி எடுக்கப்பட்டு கொழும்பு தேசிய மகாநாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளது. (2) புதுப்பித்தல் பற்றிய தனிப்பட்ட கருத்துக்களை 19, பல்கோம் பிளேஸ், கொழும்பு-8 என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது. (3) யாழ். மறை மாவட்ட மகாநாட்டின் அறிக்கைகளை தேசிய மகாநாட்டிற்கு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது (4) தேசிய மகாநாட்டிற்கு பிரதிநிதிகளை அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது.

**11. இரண்டு சுற்று மடல்கள் வெளிவந்துள்ளன என்று சொன்னீர்கள் அப்படித்தானே?**

ஆம். ஒன்று இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களின் திருமடல், அதில் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் 13 ஆயர்களும் ஒப்பமிட்டுள்ளனர். யாழ். ஆயர் அவர்களின் பணிப்புரையின்படி அத்திருமடலின் முக்கிய பகுதிகள் அச்சிடப்பட்டு ஒரு ஞாயிறு தினத்தில் யாழ் மறைமாவட்டத்தின் சகல கோவில்களிலும், சிற்றாலயங்களிலும் இறை மக்களுக்கு வாசிக்கப்பட்டு பங்குத் தந்தையர்களால் விளக்கப்பட்டுள்ளது.

**12. மற்றையது யாழ். ஆயர் அவர்களால் யாழ். மறை மாவட்டத்தின் குருக்கள், துறவியர், பொதுநிலையினர்க்கு விடுக்கப்பட்ட சுற்று மடல் தானே.**

ஆம். அதே தான். அதுவும் ஞாயிறு திருப்பலியின் போது யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க இறை மக்கள் அனைவர்க்கும் வாசித்து விளக்கப்பட்டுள்ளது.

**13. யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் விடுத்த அச்சுற்று மடலின் சில முக்கிய பகுதிகளைத் தரமுடியுமா?**

திருத்தந்தையின் அழைப்பிற்கேற்ப கூட்டப்படும் இம் மகாநாடு தேசிய ரீதியில் இரண்டாவது என்று தெரிவிக்கும் ஆயர் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன் முதலாவது தேசிய மறைப்பணிச் சங்கம் நடந்த பின் ஏற்பட்ட மாற்றங்களை சீர் தூக்கிப்பார்க்கிறார். இம் மாற்றங்கள் எம் மறை வாழ்விலும் பல சவால்களைத் தந்துள்ளன என்கிறார்.

**14. இம் மாற்றங்களும் சவால்களும் எவை என சற்று விளக்கமாகச் சொல்லமுடியுமா?**

''போராட்டங்களும் நாடுகளின் பிரிவினையும், அகதிகள் இடம்பெயர்ந்தோர் பிரச்சினைகளும் ஒழுக்க சீர் குலைவுகளும், வறுமையும் மட்டுமீறிய தன்னலப் பற்றும்...'' என்றிவ்வாறான மாற்றங்கள் எம் மறை வாழ்விலும் சவால்களைக் கொண்டு வந்துள்ளன என்கிறார்.

**15. யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப்பணி மகாநாட்டின் நோக்கம் தேசிய மகாநாட்டின் நோக்கத்தை விட வேறுபட்டதா?**

இல்லை நோக்கம் ஒன்றுதான். ''தன்னைப் புதுப்பித்து பகிரும் திருச்சபையை நோக்கி'' என்னும் மையப்பொருள் இலங்கை ஆயர் மன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டது. இதுவே யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப்பணி மகாநாட்டின் ஆய்வுத் தலைப்புமாகும்.

அன்பளிப்பு:

**இயக்குநரும், பணியாளர்களும்**
**யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

பொதுமக்கள் தொடர்புக் குழு,
மேய்ப்புப்பணி மகாநாடு.

(சி-8761)

## கணக்காளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு கணக்காளர் தேவைப்படுகின்றார்.

**தகைமைகள்:**

1.) க. பொ. த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தி அல்லது
2.) தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்கியலை ஓர் பாடமாக பயின்று சித்தியடைந்தோர்.
3) வேறு நிறுவனத்தில் கணக்காளராக அனுபவம் பெற்றிருப்பின் விரும்பத்தக்கது.

**வயது: 20 - 40 வரை**

விண்ணப்பங்கள் யாவும் 10-3-94க்கு முன்பு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

விள. இல. 315,
மேலாளர் ஈழநாதம்
யாழ்ப்பாணம்.

(சி-8763)

## புள்ளிவிபரவியலாளர் தேர்வுக்கான நேர்முகம் காணல்

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் உள்ள செயலகத்திற்கு புள்ளிவிபரவியலாளர் பதவிக்கான வெற்றிடங்கள் உள்ளன. தகுதியானவர்கள் தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் பின்வரும் முகவரிக்கு நேர்முகம் காணலுக்கு வருகை தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**கல்வித்தகைமை:—** க. பொ. த. சாதாரண தரத்தில் சித்தி

**வயதெல்லை:** — 20 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**நேர்முகம் காணலுக்கான:**

**1. இடம் :** வருவாய்ப் பகுதி,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

**காலம் : 06-03-1994**
**காலை 9-00 மணி**

**2. இடம் :** வருவாய்ப் பகுதி,
பிரதான வீதி,
நெல்லியடி.

**காலம் : 06-03-1994**
**பிற்பகல் 2-00 மணி**

குறிப்பு: ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

(7659)

## நினைவு கூருகின்றோம்..

## 1994. 03. 04

1986-ம் ஆண்டு இதேதினத்திற் மட்டு-ஆயித்திய மலைப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1988-ம் ஆண்டு மட்டு-கின்ணியடித்துறைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். ரமணி** (கிருஷ்ணபிள்ளை கணேசானந்தம்-சந்திவெளி-மட்டு)

திருகோணமலையிற் சிறிலங்கா விமானப்படையினர் நிகழ்த்திய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் போது கொல்லப்பட்டும், காணாமலும் போன 03 தமிழர்கள்.

1989-ம் ஆண்டு மணலாறு - நாயாற்றுப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். மணியம்** (கந்தையா மணிவண்ணன்-நவாலி கிழக்கு, மானிப்பாய்-யாழ்)

1992-ம் ஆண்டு யாழ்-தீவகப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் வட்டுக்கோட்டை, அராலிப்பகுதியை நோக்கி மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலிற் கொல்லப்பட்ட பெண் குழந்தை, சிறுவர்கள், பெண், இதே பகுதி வாசிகளான குடும்பத்தைச் சேர்ந்த 05 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8760)

# சேமிப்பை திரட்ட போட்டியிடும் வங்கிகள் கடன் வழங்க பின்னடிப்பது ஏன்?

நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப வங்கிகளின் வளர்ச்சி வீதம் அதிகரிக்கப்பட வேண்டும். அந்த நிலையான பொருளாதார வளர்ச்சியே ஓர் நிலையான நாட்டின் அல்லது அப்பிராந்தியத்தின் ஸ்திரமான வளர்ச்சியாக அமைய முடியும். மக்களின் பொருளாதார வளத்திற்கும் உறுதுணையாக இருக்க வேண்டிய ஒரு நிலைக்கு வங்கிகள் விரும்பியோ விரும்பாமலோ இன்று தள்ளப்பட்டுள்ளன. ஆனால் இதனை கருத்திற் கொண்டு எமது பிராந்தியத்தில் அந்த வங்கிகள் முழுமையாகச் செயற்படுகின்றனவா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

இப் பிராந்திய வங்கிகள் பணம் திரட்டுவதற்காக வாடிக்கையாளரிடம் சென்று பல பிரசாரங்களை மேற்கொண்டு பல லட்சம் ரூபாக்களை சேமிப்பாக பெற்று தனது தலைமை வங்கிக்கு அனுப்புகின்றன. ஆனால் வாடிக்கையாளர் கடன்களை பெறுவதற்கான மிகவும் சிரமமான விதிகளை விதிக்கும் தலைமையகங்களோடு சேர்ந்து தாமும் மேலும் பல விதிகளை உருவாக்கி வாடிக்கையாளர்கள் கடன்களையோ அல்லது வேறு நன்மைகளையோ வங்கியிலிருந்து பெறமுடியாதவாறு மறைமுகமாக தடுத்து வருகின்றன. எந்தக் கட்டத்திலும் தலைமையக வங்கிகளின் வரம்புகளை மீற எமது பிரதேச வங்கிகள் தயாராக இல்லை என்றே கூறமுடியும்.

வாடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்குவதாகவும், மேலும் பல வங்கிச் சேவைகளை நல்குவதாகவும் இங்குள்ள வங்கிகள் மார்பு தட்டிக் கொள்கின்றன. எனினும் வாடிக்கையாளர் வங்கிக் கடன்களை பெறுவதில் இருக்கும் தடைகளை விளக்க அல்லது வெளிப்படுத்த அவை தயங்குகின்றன. யுத்த நிலை, அசாதாரண நிலை என்ற காரணங்களைக் காட்டி வாடிக்கையாளர்களுக்குகடன் மற்றும் வங்கியிலிருந்து கிடைக்கும்நலன்களை இங்குள்ள வங்கிகள்வழங்குவதில்லை. ஆயினும் இங்குள்ள மக்களின் பணத்திலிருந்து பெருமளவை சேமிப்பு என்ற போர்வையில் மக்களிடம் இருந்து அவை பெற்றுக்கொள்கின்றன.

எமது மக்களின்சேமிப்பின் மூலம் வங்கிகளிடம் திரளும் பணம் மறுபுறத்தில் எமது பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் சிங்களக் குடியேற்றங்கள் நடைமுறைப் படுத்தப்படுவதற்கும், எம்மையே அழிக்கும் யுத்த நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை மிகவும் வேதனை அளிக்கும் ஒரு விடயமாகும்.

உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் மகளிர் பொற்கணக்கு செலன் யூனிடெக், வனிதா வாசனா திட்டங்களின் கீழ் இலங்கையில் ஆகக் கூடிய சேமிப்புக்களை பெற்ற முதல் மூன்று மாவட்ட வங்கிகளில் எமது பிராந்தியங்களும் அடங்கும். ஆனால் இந்த நிதியின் மூலம் திருகோணமலை, வவுனியா மற்றும் ஏனைய பகுதிகளின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அரசு மேற்கொள்கின்றது. இது எமது பாரம்பரிய பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு உறுதுணையாகவுள்ளது.

தமிழர் பணத்தை வங்கியில் சேமிக்காதுவிட்டால் வங்கிகள் பண ஆக்கம் செய்ய முடியாது என கூறுவார்கள். சிங்கள பகுதிகளின் தமிழர் வாழாத இடங்களில் வங்கி சேமிப்புக்களைவிட அது வழங்கிய கடன்கள் அதிகமாகவே இருப்பதை அனுபவங்களை கொண்டும் தனது வருடாந்த அறிக்கை கொண்டுமே அறிந்து கொள்ள முடியும்.

## உண்மையை மறைக்கும் வங்கிகள்

ஆனால் வங்கிகளின் கணக்கு அறிக்கை எடுத்துப் பார்த்தால் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்தான் வங்கியில் பெற்ற கடனை உயர்ந்த வீதத்தில் திரும்பச் செலுத்தியுள்ளமை புலனாகும். பல்வேறு அசாதாரண நிலை இவர்களுக்கு தோன்றிய போதும் எடுத்த கடனை கொடுக்க வேண்டும் என்பதிலே இவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டுள்ளமை புலனாகும்.

திருமலை மாவட்டத்தில் சிங்கள மீனவர் குடியேற்றப்படுவதற்கு 100 மில். ரூபா அரசாங்க விதப்புரையின் கீழ் ஒதுக்கப்பட்டது. மீன்பிடிக் கூட்டுத்தாபன ஏற்பாட்டில், இவைகளினால் இக்கடன் வழங்கப்பட்டது. இக்குடியேற்றத்திற்கு நூறு மீனவர்களுக்கு இந்த வங்கிகள் கடன்களை வழங்கியது. மிகக் குறைந்த வட்டியுடனான 9 வீதம் இகுதவணையில் மீளக் கட்டுகின்ற திட்டத்தின் கீழான இக்கடன் வழங்கப்பட்டன. இந்த நூறு மீனவர்களில் தமிழர்கள் ஒருவரும் இல்லை. இத்திட்டத்தில் தமிழர் கடன் கேட்டபோது உங்களுக்கு கடன்களை கொடுத்தால் நாம் அறவீடு செய்ய முடியாத நிலை தோன்றும் என கூறி வங்கி தட்டிக் கழித்துவிட்டது. ஆனால் இத்திட்டத்தின் கீழ் கடனைப் பெற்ற சிங்கள மீனவர்கள் பின்னர் தமது மீன்பிடி உபகரணங்கள் சேதமடைந்தன எனக் காரணம் கூறி தமது கடன்களை செலுத்த முடியாது என தெரிவித்தனர், நாம் கடன்களை மீள செலுத்த வேண்டுமாயின் எமக்கு மேலும் கடன் தரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். இதனைத் தொடர்ந்து வங்கி மேலும் 50 மில்லியன் ரூபாக்களை இவர்களுக்கு கடனாக வழங்கியது. அத்துடன் அறவீடு செய்வதை ஆறு மாதங்களுக்கு ஒத்திவைத்து வங்கி சலுகையும் காட்டியது.

**நிமலராஜன்**

ஆனால் இங்கு கடன்கள் மீள அறவிடுவதில் சிக்கல் நிலவுவதாக சுட்டிக்காட்டி வங்கிகள் கடன்களை வழங்கப் பின்நிற்பது அனைவரும் அறிந்தவொன்றே. இருப்பினும் ஒருசில வங்கிகள் தமது சுய முயற்சியினாலும், தனது பொறுப்புக்களை உணர்ந்தும் செயல் படுகையில் இதனை ஒப்ப முடியாத சில வங்கிகள் தமது செயல்பாடுகள் இங்கு மந்த நிலை அடையும் என்ற உணர்வில் இல முட்டுக்களை போடும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளன. தமது தலைமை அலுவலகம் ஊடாக செயலாற்றும் வங்கிகளின் தலைமை அலுவலகத்திற்கு அறிவுறுத்தி இதற்கு இடையூறுகளை ஏற்படுத்த முனைந்தன. இதே வேளை, தமக்கு ஏற்பட்ட நெருக்கடியை போக்குவதற்காக கடன்களை பல கட்டுப்பாடுகள் விதித்து அதிகரித்த வட்டிக்கு வழங்க முன் வந்தன.

## சேமிப்புப்பணத்தை மீளப் பெறமுடியுமா?

அடுத்ததாக, எமது மக்களிடமிருந்து சேமிப்புக்களை திரட்டும் இந்த வங்கிகள் நாளை இதைவிட ஒரு நெருக்கடியான வேளையில் மக்களின் சேமிப்புக்களை உரிய வகையில் பெற்றுத் தந்திடுமா? என்பதும் உத்தரவாதமற்றதொன்றுதான்.

ஆகவே எமது மக்களிடம் இருந்து பெறும் சேமிப்புக்களில் கணிசமான தொகையை எமது மக்களுக்கே கடனாக வழங்கி பணச்சுற்றோட்டம் பேணப்படுமாயின் அரசியல் ரீதியான நெருக்கடிகள் ஏற்படும் போதும்கூட வங்கிகள் தமது நம்பகத்தன்மையை பேணிக்கொள்ளக் கூடியதாக இருக்கும் ஆனால் இவ்வாறு செயற்படுவதற்கு வங்கிகள் தயங்குவதற்குரிய காரணம் என்ன என்பதை உணர்வது கடினமானதாகவே உள்ளது.

வங்கிகள் தமது பணத்தை தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பி அதன் மூலம் வரும் வருமானத்தில் தம்மை நிலைப்படுத்துவதைத் தவிர்த்து, தலைமை அலுவலகத்தில் இருந்து பணத்தை இங்கு வரவழைத்து இங்கிருந்து வட்டியைப் பெற்று அவ்வட்டியை தமது தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதே சாலச் சிறந்த வங்கி அமைப்பாகும். இத்தகையதொரு நிலை ஏற்படும் போதே வங்கிகள் எமது பிரதேசத்திற்கு சிறந்த சேவை ஆற்றியதாக கருத முடியும்.

இன்று வங்கிகள் மக்களிடம் இருந்து பணத்தை திரட்டுவதற்கான வழிமுறைகள் தொடர்பாக பல வகையான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் மக்களுக்கு வழங்கப்படும் கடன்கள் அல்லது ஏனைய சேவைகள் தொடர்பாகவும் இக்கடன்களின் மூலம் செயல்படும் திட்டங்கள் தொடர்பாகவும்பிரசாரங்களோ அன்றி விளக்கங்களோ வழங்கப்படுவதில்லை என்பதுகாணக் கூடியஒன்றே எனவே வங்கியானது தனது சேவை முழுமையாக வைப்புக்களை ஏற்பது என்பதில் இருந்து விடுபட்டு வாடிக்கையாளன் நலன்களும்அதனுள் அடங்கிய சேவை எனபதில் அக்கறை செலுத்த வேண்டும்.

வங்கிகள் மக்கள் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதன் மூலம் தலைமையகத்தின் நம்பிக்கையைப் பெற எத்தனிக்கின்றன. அத்துடன் வாடிக்கையாளர்களுக்கும் அப்பிரதேசத்திற்கும் தேவையானவற்றை செய்ய பின்நிற்கின்றன.

இன்று நாம் பொருளாதார ரீதியில் ஒதுக்கப்படுகின்றோம். எமக்கு தேவையான பொருளாதார ஊக்குவிப்புக்கு கடன்களை வங்கிகள் வழங்க முடியும். அரச சார்பற்ற நிறுவனங்கள், சமநலசேவை நிறுவனம். அரசாங்க அதிபர், அரசாங்க சேவைகள் நிறுவனம் என்பன போன்றவற்றுள் ஒத்துழைப்புடன் கடன்களை வழங்குவதன் மூலம் மீள அறவீடு செய்வதில் சிக்கல் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். இவை மேசை மட்டத்திலான பேச்சாக இருக்காமல் நடைமுறை செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். இதில் கணிசமான பங்களிப்பு அரசாங்க அதிபரையும் சார்ந்தது.

இப்படி செய்வதன் மூலம் அரசின் பொருளாதார புறக்கணிப்பில் இருந்தும் நாம் ஓரளவுக்கு எம்மை தக்க வைத்துக்கொள்ள வாய்ப்புஉண்டாகும். இதற்கு ஒத்துழைப்பை வங்கிகள் மேற்கொள்ள தயக்கம் காட்டுகின்றன. தத்தமது வேலையை மட்டுமே செய்தால் போதும் மேலதிக வேலைகளைத் தூக்கி வேலைப்பளுவை அதிகரிக்க வேண்டியதில்லை எனக் கூறி இங்கு வங்கிகள் ஒதுங்கிக் கொள்கின்றன.

## தட்டிக் கழிக்கும் வங்கியின் செயற்பாடு

வாடிக்கையாளர்கள் கடன்களுக்காக வங்கியை நாடும் போது, கடன் வழங்க மாட்டோம் எனக் கூறி வாடிக்கையாளரின் அதிருப்தியை சம்பாதித்துக் கொள்ள தயாராக இல்லாத சில வங்கிகள் சில தேவையற்ற முட்டுக் கட்டைகளையும் இழுத்தடிப்புக்களையும், உதாசீனங்களையும் செய்கின்றன. இந்த முட்டுக் கட்டைகளை சட்ட நுணுக்கம் மூலம் வங்கிகள் மூறியடிக்க வேண்டும். அல்லது செயற்பாட்டு எல்லைகள் பற்றி முழு அளவில் பகிரங்கப்படுத்தி உண்மை நிலையை அம்பலமாக்க வேண்டும்.

இன்று தபால் விநியோகத் தாமதங்கள் திட்டமிட்டு செயற்படுவது ஒன்றும் இரகசியமானதல்ல இதனால் வரும்நாணய மாற்றுக்கள்குறிப்பிட்ட காலப்பகுதியில் காலவதியாகி விடுகின்றன. இதனால் ஏற்படுகின்ற பொருளாதார தாக்கத்தை வங்கிகள் உணர்ந்து கருமமாற்ற வேண்டும். இதற்கான விதி தளர்வுகளை வங்கிகள் கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

வங்கி முகாமையாளர் குறிப்பிட்ட அளவு தீர்மானங்களை தானே மேற்கொள்ள முடியும் எனவே தமக்கு இயன்றளவுக்கு தீர்மானங்களை எடுக்கும் துணிவை வங்கிகள் பெற வேண்டும் எந்தவொரு கட்டத்திலும் வங்கிகளை மூடுவதற்கு தலைமையலுவலகம் தயாராக இல்லை என்பதையும் அப்படி மூடுவதானால் அதன் வங்கி தொழிலை பல வழிகளில் பாதிக்கும் என்பதையும் இங்குள்ள வங்கிகள் உணர வேண்டும். ஆகையால் வங்கிகள் தாம் செயற்படும் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய கடமையை நிறைவேற்றியாகவேண்டும் அத்தகைய வங்கிகளே இன்று எமக்குத் தேவை எனலாம்.

தென்னிலங்கைப் பகுதிகளின் வங்கிகள் தமது பிராந்தியத்தில் வாழ்வோருக்கு தேவையான சமூக சேவைகளை பெருமளவிற்கு மேற்கொள்ளுகின்றமையை நாம் அறியக் கூடியதாக உள்ளது. ஆனால் இங்கு அப்படியான சமூக சேவைகளை வங்கிகள் செய்வதேயில்லை-இவ்வாறான திட்டங்களை மேற்கொள்ள தலைமையலுவலகத்திடம் அனுமதி கேட்டதாகக் கூட தெரியவில்லை.

அவர்கள் கூறும் முன்பே பல காரணங்களை இவர்களே கற்பனை செய்து கொள்கின்றார்கள்

## சமூகத்தைச் சுரண்டும் வங்கிகள்

எமது மக்களிடையே வாழும் அங்கவீனர்களுக்கு உதவுவதற்கு அல்லது வைத்தியசாலை, பாடசாலைகள் போன்ற முக்கிய நிறுவனங்களுக்கு தேவையான ஒரு சிறு வசதிகளை பூர்த்தி செய்வதற்கு வங்கிகள் முற்படலாம். ஆனால் இத்தகைய சமூகப் பணிகளில் வங்கிகள் தம்மை ஈடுபடுத்தாத அதே சமயத்தில் எமது பிராந்தியத்திற்கென வரும் எரிபொருளில் மண்ணெண்ணெய் மாதாந்தம் சுமார் நூறு பீப்பாவை தமது தேவைக்கெனப் பெற்றுக் கொள்கின்றன, இவ்வாறு எரி பொருள் உறிஞ்சப்படுவதனால் சமூகத்தின் ஏனைய பகுதியினர் பாதிக்கப்படுவதை வங்கிகள் கண்டு கொள்வதே இல்லை. வங்கிகள் தமக்குத் தேவையான எரிபொருளை கொழும்பில் இருந்து தானே தருவிக்கட்டும் அப்படியில்லாவிட்டால் இங்கு வெளிச் சந்தையில் தமக்கு தேவையான எரிபொருளை கொள்வனவு செய்வதே சரியானதாகும்.

மேலும் இன்று போக்குவரத்து நிலைமைகளினால் சிக்குண்டுள்ள பாவனையாளர்களின் நலன் கருதி தமது கருமபீட நேரத்தை சற்றுப் பின்தள்ளிவைக்கலாம். அதாவது தற்போது 12 மணிவரை செயற்படும் கொடுக்கல் வாங்கல் கருமபீடம் 2.30 மணிவரையாவது செயற்படலாம். இதனை நடைமுறைச் சிக்கல் எனத் தட்டிக்கழிக்கமுடியாது. ஏனெனில் வங்கிகள் தமது தேவைகருதி நேர நீடிப்பு செய்திருந்தமை சுட்டிக் காட்டக்கூடியது. அதாவது தமது தேவை கருதிய நோக்கம் மட்டும் குறிக்கோளாகக்கொண்டு செயற்படாது வாடிக்கையாளரின் நன்மை கருதி செயற்படவேண்டும். இதுவே போக்குவரத்து நெருக்கடிகளை அனுபவிக்கும் வாடிக்கையாளருக்கு ஒரு நிவாரண ஆறுதலாகும். அத்துடன் வாடிக்கையாளர்கள் தமது நாளாந்தக் கடமைகளில் எந்தவித பாதிப்புமின்றி வங்கிச் சேவையைப் பெற்றுக் கொள்ளவும் இதன்மூலம் வாய்ப்பு ஏற்படும். இத்தகைய சலுகைகளை வங்கி காட்டுவதற்கு என்ன தடை இருக்கமுடியும் என்பது வாடிக்கையாளர் மத்தியில் உள்ள முக்கிய கேள்விகளில் ஒன்றாகும்.

## அரசின் நடவடிக்கைக்கு துணைபோகின்றனர்

இன்று குறிப்பிட்டளவு பணத்தை மட்டுமே வங்கிகள் தமது இருப்பில் வைத்திருக்கவேண்டுமெனவும் இங்கு பணத்திற்குப் பாதுகாப்பு இல்லையெனவும் வங்கிகளின் தலைமை அலுவலகம் அறிவுறுத்தி தான் குறிப்பிட்ட தொகைக்கு மேலான பணத்தைத் தன்னிடம் அனுப்புமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. ஆனால் இதுவும் கூட வங்கிகள் எமது மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைக்குத் துணைபோகின்றன என்றே கூறமுடியும் இதனை முறியடித்து நாம் இதனைவிட கூடுதலான பணத்தை வைத்திருக்கமுடியும் என்று எந்த வங்கியும் தலைமையகத்திற்கு எடுத்துக் கூறவுமில்லை. இதற்குவங்கிகள் தயாராகவும் இல்லை. மாறாக தலைமை அலுவலகங்கள் விதிக்கும்

(9ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி அனுமதி

## - ஓர் நோக்கு -

பேராசிரியர்
**பொ. பாலசுந்தரம்பிள்ளை**

இலங்கையில் 1942 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகம் முதல் முறையாக அமைக்கப் பெற்றது. இதற்கு முன்னர் கொழும்பில் இருந்த பல்கலைக் கழகக் கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரியாகவிருந்தது. 1940 களில் இலங்கைக்கு ஒரு வசதியான வதிவிட வளாக அமைப்பைக் கொண்ட பல்கலைக் கழகத் தொகுதியை அமைத்தது. கொழும்பில் இயங்கி வந்த பீடங்களை புதிய வளாகத்திற்கு இடமாற்றம் செய்ய வேண்டும் என்ற நிலையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இடம் அமைவாகத் தெரிவு செய்யப்பட்டது. 1952லிருந்து 1964ஆம்ஆண்டு வரைக்கு கொழும்பிலிருந்த பீடங்கள் பேராதனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அல்லது கொழும்பில் பீடங்கள் இருக்கக் கூடியதாக இரண்டாவது பீடங்கள் அமைக்கப்பட்டன. 1960களின் முற்பகுதியில் மாணவர்களுடன் அனுமதி அறிவிக்கப்பட்டதால் முன்னைய கொள்கைகள் கைவிடப்பட்டு கொழும்பிலும் பேராதனையிலும் பல்வேறு பீடங்கள் அமைய வேண்டிய நிலை ஏற்பட்டது. 1961ஆம் ஆண்டில் கொழும்பிலும் பேராதனையிலும் மருத்துவ கல்வியும் விஞ்ஞானகல்வியும் அமைக்கப்பட்டதுடன் 1963ஆம் ஆண்டில் கொழும்பில் கலைக் கல்வியும் அமைக்கப்பட வேண்டியதாயிற்று. 1968லேயே இலங்கையில் பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகம் பேராதனையில் இருந்து பிரிக்கப்பட்டு கொழும்பு பல்கலைக்கழகம் என்ற பெயரைத் தாங்கி இரண்டாவது பல்கலைக்கழகம் அமையப் பெற்றது.

1958ஆம் ஆண்டு புகழ்பெற்ற வித்தியாலயங்கள் வித்தியோதய பிரிவேனாக்கள் பல்கலைக்கழக அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டன. எனினும் பல்கலைக்கழக நடவடிக்கைகள் 1970களுக்கு முன்னர் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்கொண்டவையாகவே இருந்தன. 1972ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசு இலங்கையில் ஒரு பல்கலைககழகத்தை ஏற்படுத்த வேண்டுமெனத் தீர்மானித்து அன்றிலிருந்து எல்லாப் பல்கலைக்கழகங்களையும் இணைத்து இலங்கைப் பல்கலைக்கழகம் என்ற ஒன்றை ஏற்படுத்தி அதன்கீழ் வளாக அமைப்பையும் உருவாக்கியது. இதனுள் பேராதனை, கொழும்பு, வித்தியாலங்கார, வித்தியோதய ஆகிய பழைய நான்கு பல்கலைக்கழகங்களுடன் கட்டுப்பெத்த தொழில்நுட்பக் கல்லூரியும் இணைக்கப்பட்டு ஐந்து கொண்ட ஒரு பல்கலைக்கழகமாக மாறியது. அன்றைய இத்திட்டத்தை முன்மொழிந்தவர்களுடைய எதிர்பார்ப்புக்கள் ஒவ்வொரு வளாகமும் வெவ்வேறு துறைகளில் முதன்மை நிலையங்களாக மாற வேண்டும் என்பதேயாகும். உதாரணமாக களனியில் மானிடவியல், மொறட்டுவவில் பொறியியல், வித்தியோதயாவில் வணிக முகாமைத்துவம் போன்றவையாகும்.

இவ் அமைப்புக்குள் 1974-ல் யாழ்ப்பாண வளாகம் அமைக்கப்பட்டது.

1977இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒரு பல்கலைக்கழக வளாக அமைப்புகளை மாற்றி கல்வித் தன்னாட்சி கொண்ட பல்கலைக்கழகத்தினை அமைக்கத் தீர்மானித்தது. இதன் வழியாக அன்றிருந்த 6 வளாகங்களும் 1978இல் தனித்தனி பல்கலைக்கழகங்களாகின.

1978ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் மாத்தறையிலும், மட்டக்களப்பிலும் ஆரம்பத்தில் இரு பல்கலைக்கழக கல்லூரிகள் அமைக்கப்பட்டு சிறிது காலத்தில் றுகுணுப் பல்கலைக்கழகமாகவும் கிழக்கிலங்கைப்பல்கலைக்கழகமாகவும் மாறின. மேற்குறித்த பல்கலைக்கழகங்களுடன் திறந்த பல்கலைக்கழகம் ஒன்று 1980இல் நிறுவப்பட்டது. இவை தவிர புத்தகுருமாருடைய கல்விக்கு அனுராதபுரத்திலும் பாளி, பௌத்த கல்விக்கு கொழும்பிலும் இரண்டு பல்கலைக்கழகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர 1980 களில் பல உயர் கல்வி நிறுவனங்கள் விவசாயம், தொல்லியல், பௌத்த பாளிக் கல்வி, மருத்துவம், சுதேச வைத்தியம், தொழிலாளர் கல்வி, கணணித்தொழில்நுட்பத்திற்கு நிறுவனங்கள் அமைக்கப்பட்டு மேற்படி பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு போன்றவற்றிற்கு இவ் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன எனக் கருதலாம்.

### பல்கலைக்கழக அனுமதி முறை:.

இலங்கையில் உயர் கல்வி வாய்ப்பு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை இன்றோ அல்லது சில தசாப்தத்திற்கு முன்னரோ ஒப்பீட்டு ரீதியில் விருத்தியடைந்த நாடுகளுடனோ அல்லது தென்னாசிய நாடுகளுடனோ ஒப்பிடும் போது உயர்வாக விருந்ததில்லை. ஆகவே உயர்கல்வியானது அனுமதியைப் பொறுத்த வரை மட்டுப்படுத்தப்பட்டதாகவேயிருந்து வந்துள்ளது. எனினும் 1970களுக்கு முன்னர் உயர்கல்வியை நாடிய மாணவர் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் இக் கட்டுப்பரடு அதிகளவிற்கு பிரச்சினைகளை உருவாக்கவில்லை. 1970களின் பின் கடந்தகால் நூற்றாண்டு காலமாக இலங்கையில் பல்கலைக்கழக அனுமதிபல்கலைக் கழக கல்வி அல்லது மூன்றாம் உலக கல்வி வாய்ப்புக்கள் மேலும் மேலும் இறுக்கமும் போட்டியும் நிறைந்ததாகவே வந்துள்ளதைக்காணலாம்.

பல்கலைக்கழக அனுமதி முறை சார்ந்து பின் நோக்கிப்பார்க்கின் 1964 ஆம் ஆண்டு வரை இலங்கைப் பல்கலைக்கழக அனுமதி முறைப் பரீட்சையை பல்கலைக்கழகமே நடத்தியது. வித்தியாலயங் கார வித்தியோதய பல்கலைக் கழகங்கள் கூடத்தமது அனுமதியை தாங்களே தீர்மானித்துக் கொண்டன.

இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவோர் மூன்று பாடங்களில் சித்தியுடன் நான்காவது பாடத்தில் 25 புள்ளிகளுக்கு மேல் பெற்று மொத்தம் 145 புள்ளிகள் பெற வேண்டும். ஆகவே இத்தகைமை பெற்ற சகல மாணவர்களும் பல்கலைக்கழகக்கல்விக்குத் தெரிவு செய்யப்பட்டனர், மேலும் விஞ்ஞானத்துறைகளில் மேற்குறிப்பிட்ட தகைமையிலும் பார்க்ககுறைவான தகைமைகள் பெற்றும்நேர்முகப்பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். ஆகவே 1965ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழக அனுமதி இன்றையது போல் போட்டிப் பரீட்சையாக அமையாது ஒருதகுதிகாண் பரீட்சையாக அமைந்திருந்தது அன்றைய இலங்கைப் பல்கலைக்கழகத்துணைவேந்தர்நிக்கலஸ் ஆட்டிகலஅவர்கள் தகுதி பெற்ற கலை மாணவர்களையும் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பது என்ற திடமான கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார். இதனால் 1960 களின் முற்பகுதிகளில் கொழும்பிலும் பேராதனையிலும் புதிய புதிய பிரிவுகள் மிகக் குறுகிய காலத்தில் அமைக்கப் பெற்றன' 1965 செப்ரெம்பரில் அன்றைய கொழும்பு குதிரைப் பந்தயத்திடல் கட்டிடங்களைப் பயன்படுத்தி 4000ற்கு மேற்பட்ட மாணவர்கள் முதலாம் வருட கலைப்பீடத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.

1965இலிருந்து பல்கலைக்கழக அனுமதிப் பரீட்சையில் மாறுதல் ஏற்பட்டன, மூன்று பல்கலைக்கழகங்கள் தனித்தனியே நடாத்தும் பரீட்சைக்குப்பதிலாகவும்உயர்தர பாடசாலைப் பரீட்சைக்கு (H-S-C) பதிலாகவும் கல்விப் பொதுத் தராதரப்பரீட்சை(உ.த)(ஜி.சி.ஈ. A|L)முறை ஏற்படுத்தப்பட்டது. மேலும் மாணவர்கள் அனுமதி முறை மையப்படுத்தப்பட்டும் எண்ணிக்கையும் தகுதிகாண் நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு பல்கலைக் கழகங்கள் அனுமதிககக்கூடிய எண்ணிக்கையின் அடிப்படையிலும் அனுமதி கட்டுப்படுத்தப்பட்டது. ஆகவே இவ் அடிப்படைமாற்றமே காலக்கிரமத்தில் பெரும் பிரச்சினையாக் வளரத் தொடங்கியது, ஆரம்பத்தில் விஞ்ஞானம் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கைகள் அதிகமாக இல்லாதபடியால் விஞ்ஞானத்துறைகளில் பெரும் பிரச்சினை எழவில்லை. ஆனால் கலை மாணவரின் எண்ணிக்கை 1965இலிருந்து கட்டுப்படுத்தப்பட்டு இன்றுவரை 1965ஆம்ஆண்டு கலைபீட அனுமதியை ஒத்த மாணவரின் எண்ணிக்கை அனுமதியே இதுவரை அனுமதித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

கலைக் கல்வியைப் பொறுத்தவரை அன்றிலிருந்து இன்று வரை கலைகல்வி கற்கின்ற மாணவர் எண்ணிக்கையளவினைக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் 1965-70 களுக்கு இடைப்பட்ட காலத்தில் அன்றைய கல்வி அமைச்சர் I M.R.A. ஈரியகொலவும் உயர்கல்விநிறுவனங்களுக்கிடையில் நட்புறவு நிலவியது எனக்கொள்வதற்கில்லை இவரது காலத்தில் ஐந்து பல் கலைக்கழகக்கல்லூரிகள்(Former University) அமைக்கப்பட்டன. இதன் மூலம் புதிய சில கற்கை நெறிகள் அறிமுகம் செய்யப்பட்ட போதிலும் ஒரு தொகுதியினரே படித்து வெளியேறினர் 1970ஆம் ஆண்டில் ஆட்சிமாற்றத்துடன் இக் கல்லூரிகள் ஒழிக்கப்பட்டு மாணவர்கள் தொழில் நுட்பக் கல்லூரிகள் ஆசிரிய கலாசாலைக்கு மாற்றப்பட்டனர்.

1970 களில்பல்கலைக் கழக அனுமதி நாட்டில் பெரும் பிரச்சினையைத் தோற்றுவித்தது. பல்கலைக்கழக விஞ்ஞானபொறியியல் பீடங்களில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்ததன் விளைவாக பிரச்சினை உருவானது. முதன் முதலாக வெவ்வேறு மொழி மூலம் தோற்றும் மாணவர்களின் பெறுபேறுகள் தரப்படுத்தப்பட்டன. மொழிவாரித் தரப்படுத்தலின் பின்னர் பல்கலைக்கழக அனுமதி முறையான மாவட்டக் கோட்டா முறையின் மூலம் அனுமதிக்கப்பட்டனர். இவ்விரு செயற்பாடுகளின் விளைவால் தமிழ் மாணவர்கள் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்ட விஞ்ஞானத்துறை சார்ந்த மாணவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். இம்முறையின் மூலம் மிகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற யாழ்ப்பாண மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு மிகக்குறைவான புள்ளிகளைப் பெற்ற ஏனைய மாவட்ட மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது ஆகவே இந்தச் செயற்பாடு யாழ்ப்பாண மாணவர்களை கிளர்ச்சியில் ஈடுபடத் தூண்டின. இதுவே இன்றைய போராட்டத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணங்களில் ஒன்றாகும்.

பல்கலைக்கழக அனுமதிப் பிரச்சினையின் தாக்கத்தின் விளைவினாலேயே யாழ்ப்பாண வளாகமும் அமைக்கப் பெற்றதெனக் கொள்ள இடமுண்டு. நீண்டநாள் கோரிக்கையும் இவ்வளாகம் அமைய காரணமாகவிருந்தன. எனினும் இவ்வளாக அமைப்பின் மூலம் புதிதாகப் பெருமளவு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள் எனக் கூறுவதற்கில்லை. ஏனெனில் மொத்த அனுமதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. 1977 களில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மொழிவாரித் தரப்படுத்தலுடன் பல்கலைக் கழக அனுமதியில் ஒரு புதிய பிரதேச அனுமதியைக் கடைப்பிடித்தது. தேசிய, மாவட்ட, பின் தங்கிய மாவட்ட ரீதியாக அனுமதி வழங்க முற்பட்டது. மொத்த அனுமதியில் 30வீதம் தேசிய ரீதியிலும், 55 வீதம் மாவட்ட அடிப்படையிலும், 15 வீதம் பின்தங்கிய மாவட்ட அடிப்படையிலும் அனுமதிக்கப்பட்டது. மேலும் வடகிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இரண்டினைத் தவிர ஏனைய வடக்கு, கிழக்கு மாவட்டங்கள் பின் தங்கிய மாவட்டங்களாக கணிக்கப் பெற்றதும் ஒரு சிறு சகாயம் கிட்டியது எனக் கொள்ள இடமுண்டு. மொத்த அனுமதி 4000 இலிருந்து 5000 ஆக அனுமதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக அனுமதி முறையில் மீண்டும்1980களின் பிற்பகுதிகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. பழைய பிரதேச அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்ட போதிலும் விகிதாசாரத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. தேசிய ரீதியில் 40 வீதமும் மாவட்ட அடிப்படையில் 55 வீதமும் பின்தங்கிய மாவட்டங்களுக்கு 5 வீதமாகவும் ஒதுக்கப்பட்டன. மேலும் பல்கலைக்கழக வெட்டுப் புள்ளி 160இலிருந்து வருடம் ஒன்றிற்கு 5 புள்ளியாக அதிகரிக்கப்பட்டு 180 புள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இதன் மூலம் விருத்தியடைந்த மாவட்டங்கள் சிறுஅளவில் நன்மை பெற வாய்ப்புக் கிட்டியது எனக் கொள்ளலாம். கலைத்துறையில் நாட்டில் வெவ்வேறுமாவட்டங்களிடையேகாணப்பட்ட பெறுபேறுகளிடையே பெருமளவு வேறுபாடுகள் காணப்பட்டதனால் 1989/90 கல்வியாண்டிற்கு முழு மாணவர்களுமே தேசிய திறமை அடிப்படையிலேயே கடந்த இரண்டு வருடங்களாக தெரிவு செய்யப்படுகின்றனர். எனினும் எந்தவொரு மாவட்டங்களும் 1989/90கல்வியாண்டில் அனுப்பிய மாணவர்களுக்கு குறையாத மாணவரை அனுப்புவதற்குரியஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக அனுமதியில் மேலும் சிக்கல்கள் அல்லது திருப்தியின்மை நிலவும் காரணத்தினால் இது குறித்து ஆராய அண்மையில் ஐவர் கொண்ட குழுவொன்றுஅமைக்கப்பட்டுள்ளது- பிரதேச வேறுபாடுகள் இன்னும் கூடுதலாக காணப்படுகின்றன. உதாரணமாக கொழும்பு' யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் இருந்து 260 புள்ளிகள் பெற்று மருத்துவபீடத்திற்கு அனுமதி பெறாது இருககும் நிலையில் 180 புள்ளிகளுடன் பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து மாணவர்கள் அனுமதி பெறக் கூடிய நிலையுண்டு. இதே போலப் பொறியியல் மருத்துவம் போன்ற விருப்பத்திற்குரிய துறைகளில் இத்தகைய நிலைகள் தென்படுகின்றன. இது மாணவர்கள் பெற்றோர் மத்தியில் பெரிய விரக்தியையும் தோற்றுவித்திருக்கின்றது. ஒரு பக்கம் பின் தங்கிய மாவட்ட மாணவர்களுடைய பிரச்சினைகளும் கவனிக்கும் பட்சத்திலும் பெரியளவு வேறுபாடுகள் இருக்க வேண்டுமா என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இதனுடன் தெற்கின் நிலைமைகளை ஆராய்வது முக்கியமானதாகஉள்ளது பல்கலைக்கழக அனுமதியில் ஒரு சில துறைகளில் மாத்திரமே அந்தந்த பல்கலைக்கழகங்கள் அனுமதிக்கும் முறை காணப்படுகின்றது. அதாவது எல்லாப் பல்கலைக் கழகங்களை பட்டப்பின் படிப்பிற்குரிய அனுமதியை அவ்வப்பல்கலைக்கழகங்களே வழங்குகின்றன. இவை சிறு தொகையாக இருப்பதால் தேசிய ரீதியில் பிரச்சினை எழவில்லை. பட்டப்படிப்பில் யாழ் பல்கலைக்கழகம், இராமநாதன் நுண்கலைத்துறைகளுக்கான சங்கீதமாணி நாட்டியமாணி, இசைக்கலைமாணி, நாட்டியக்கலைமாணி துறைகளும் சித்தவைத்தியதுறைக்குமான மாணவர் அனுமதியையும் யாழ். பல்கலைக்கழகமே நடைமுறைப் படுத்துகின்றது. இத்துறைகளிலும் பட்டப்பின் படிப்பு துறைகளிலும் மாணவர் அனுமதியை நாட்டின் தேவை, இனத்தின் தேவைகளை கருத்தில் கொண்டு வளங்களை உச்சப் பயன்பாட்டிற்கு எடுத்து எண்ணிக்கையை தீர்மானிக்கும் நிலை பல்லைக் கழகத்திடம் உண்டு எனலாம்.

பல்கலைக்கழகஅனுமதியின் விசேட அனுமதிகள் அண்மைக்காலங்களில் வளர்ச்சி பெற்றுவருகின்றன. பிரசித்தி பெறாத பாடங்கள் வயது குறைந்தவர்கள் வயதானர்கள் தேசிய ரீதியில் விளையாட்டு மற்றும் சாகித்திய துறைகளில் முன்னிற்பவர்களுக்கு விசேட அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய போக்கு சர்வதேச ரீதியாக காணப்படுவதனால் வளரும் எனக் கொள்ள இடமுண்டு.

பல்கலைக்கழக அனுமதியில் அன்றிலிருந்து இன்று வரை பிரச்சினையாக அமைவது வருடாவருடம் அனுமதிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையே ஆகும். மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்காது, கவனமெடுக்காது அதனைக்

(10ஆம் பக்கம் பார்க்க)

# முடிவுறாத புரட்சியொன்றில் மூழ்கிய ருஷ்ய மக்கள்

பாலகுமாரன்

ருஷ்யாவின் தற்போதைய நிலையை என்னவென்று உரைப்பது என்று எவருக்கும் விளங்கவில்லை. இலக்கு எதுவுமின்றி நடுக்கடலில் அலைபாயும் படகுபோல ருஷ்ய அரசியல் இன்று அல்லாடுகின்றது. ஒரு பெரும் வல்லரசாக தோற்றமளித்த ஒரு பெரும் நாடு படையெடுப்புக்களோ அல்லது பெரும் போர்களோ எதுவுமின்றி சீர்குலைந்த வேகம் உலக வரலாற்றிலே எங்கும் காணமுடியாத நிகழ்வென வரலாற்றாளர் இப்போது குறித்துக்கொள்கின்றனர். புரட்சி என்றும்சொல்ல முடியாது- எதிர்ப்புரட்சி என்றும் வருணிக்க முடியாது- தெளிவான இலக்குகளும் விளைவுகளும் இன்றி 1991ன் பின் ருஷ்யாவில் அரங்கேறும் குழப்பங்கள் இன்னமும் தொடர்கின்றன. இப்போதைய அரசியல் விபத்தாக- ருஷ்யாவை ஒரு சீரான பொருண்மியப் பாதையில் இட்டுச்செல்ல யெல்ட்சினால் முடியாமையே -ஆகிவிட்டது.

1991-ம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் கோர்பச்சேவ் வீழ்த்தப்பட்டு ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட, 1992-ம்ஆண்டு தொடக்கத்தில் பெரும் முனைப்புடன் யெல்ட்சினும் அவரது ஆதரவாளர்களும் மேற்கத்தேய பாணியில் பொருண்மியமறுசீரமைப்பை மேற்கொள்ள எடுத்த முயற்சிகள் நாடாளுமன்றில் இருந்த பொதுவுடைமைக் கட்சியின் செல்வாக்கால் தடைப்பட்டது. பெரும் இழுபறிகளின் பின் 1993-ம் ஆண்டு நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பும்பயன்தராதநிலையில்யெல்ட்சின் இராணுவத்தை ஏவி நாடாளுமன்றைத் தாக்கி அங்கிருந்த தனது எதிரிகளை சபாநாயகர் ருஸ்லான் குஷ்புலட்டோவையும் உப சனாதிபதி அலெக்சாண்டர் ருட்ஸ்கோவையுஞ்சிறைப்பிடித்தார். சிக்கல் தீர்ந்தது எனப் பெருமூச்சுவிட்டார். மேற்குலகோ அவரைப் பாராட்டியது; கிளின்டனோ சனநாயகத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்றார்.

எனவே தனக்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்கமுடியும் என்ற நம்பிக்கையில் 1917-ம் ஆண்டுப் புரட்சியின் பின் முதல் தடவையாக நீதியான சனநாயகத் தேர்தலை நடாத்தி புதிய நாடாளுமன்றை தெரிவுசெய்யப்போவதாகவும் தனக்கு மிகக்கூடிய அதிகாரங்களைக் கொடுக்கும் புதிய அரசியல் யாப்பொன்றையும் மக்கள் சம்மதத்திற்காக முன்வைக்கப்போவதாகவும்யெல்ட்சின் நம்பிக்கையோடுஅறிவித்தார்

இதன்படி கடந்த டிசம்பர் மாதம் 12-ம் திகதி பொதுத் தேர்தல் நடைபெற்றது. ஆனால் முடிவுகள் யெல்ட்சினும் அவரது மேற்கத்தேய ஆதரவாளர்களும்எதிர்பார்த்ததுபோல் அமையவில்லை. இப்போது புதிதாக கூடிய நாடாளுமன்றம் முதலில் செய்த தீர்மானம் யெல்ட்சினால் இறையிலிடப்பட்ட குஷ்புலட்டோவையும்,ருட்ஸ்கோவையும்விடுவித்ததுதான். இச்செயல் யெல்ட்சினுக்குப் பெருத்த அவமானமாகிவிட்டது. சுடுமணலில் கால்வைத்தவர் போல் அவர் இப்போது பதறுகின்றார்; சென்ற டிசம்பர் தேர்தலில் அவரைச் சர்வாதியாக்குமாறு நீதித்துறை சட்டத்துறைஎல்லாம்அவரின் கீழ் செயற்படும் வகையில் வரையறையற்ற அதிகாரங்களை அவருக்கு வழங்கும் யாப்பினை மக்கள் ஏற்று வாக்களித்தபோதும் முன்னர் போல நாடாளுமன்றம் ஏட்டிக்குப் போட்டியாகச்செயற்பட முனைவது அவரைப் பெரும் இக்கட்டில் இன்று மாட்டிவிட்டது.

இது எவ்விதம் நிகழ்ந்தது? கடந்த டிசம்பர் தேர்தலில் எவரும் எதிர்பார்க்காதவிதத்தில் எக்கணிப்புக்களும்கணித்திராத வகையில் ருஷ்ய அரசியலிலே ஒரு புதிய அணி சடுதியாக தோற்றம்பெற்றது 1990-ம் ஆண்டே தோற்றுவிக்கப்பட்ட - முன்னர் அதிகம் எவரும் அறிந்திராத- கவனிப்பாரற்ற கட்சி ஒன்று- எதிர்பாராத வெற்றியீட்டியது. தேர்தலில் போட்டி யெல்ட்சினின் மாற்றங்களை ஆதரிக்கும் கட்சிகட்கும்தடை நீக்கப்பட்ட முன்னாள் பொதுவுடைமைக் கட்சிக்கும் அதன் கூட்டுக்கட்சிகளுக்கும் இடையே என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தாராண்மைவாத சனநாயகக்கட்சி (Liberal Democrotlc) மொத்த வாக்குகளில் 23 சதவீத விழுக்காட்டினைப் பெற்று 78 ஆசனங்களை பெற்றது. அதன் தலைவரும் முன்னெப்போதும் எவரும் அறிந்திராத பின்னணியைக் கொண்டவருமான விளாடிமிர் சிறினோவ்ஸ்க்கி (Vladimir Zhirinovsky) ருஷ்ய அரசியலில் பெரும் புயலை மட்டுமல்ல பெரும் புழுதியையும் கிளப்பிவிட்டார். அதுமட்டுமன்றி யெல்ட்சினின் சகல நடவடிக்கையையும் முற்றாக எதிர்க்கும் பொதுஉடமைக்கட்சிக்கு 64 இடங்களும் விவசாயிகள் கட்சிக்கு 55 இடங்களும் கிடைத்தன யெல்ட்சினை நேரடியாக ஆதரிக்கும் கட்சிகள் பெற்றது 94 ஆசனங்கள் மட்டுமே. 50 ஆசனங்கட்கும் குறைவாக யெல்ட்சினை ஆதரிக்கக்கூடிய சில கட்சிகளும் வெற்றி பெற்றபோதும் தமக்குள் கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தாலும் யெல்ட்சினை எதிர்க்கும் விடயத்தில் பிரதான 3 எதிர்க்கட்சிகளும் ஒன்று சேரும் என்பதே யெல்ட்சினுக்கு தலைவலியாகிவிட்டது.

யெல்ட்சினின் சீர்திருத்த ஆதரவாளர்கள் குறிப்பாக யெல்ட்சினின் பிரதான நண்பர் யெகோர் கெய்டார் (Yegor Gaidar) தேர்தலில் வெற்றிபெற செய்யாத முயற்சியில்லை. பலவித உத்திகளை மேற்கத்தையப் பாணியைக்கையாண்டு சினிமாநடிகர், முன்னணி பாடகர், விளையாட்டு வீரர்கள் - ஏன் சதுரங்க விளையாட்டு மன்னர் காரி கஸ்பரோவ் கூட இவர்கட்காக மேடை ஏறினார். பலன் கிட்டவில்லை, முன்னாள் பொதுஉடமைக் கட்சிக்கு இன்னமும் கிராம மட்டங்களில் ஆதரவும் அணியும் இருப்பது இப்போது நிரூபிக்கப்பட்டு விட்டது. இக்கட்சியினர் தீவிரமான பிரசாரத்தை மேற்கொண்டு ''யெல்ட்சின் பேசுவதோ சனநாயகம்; இடிப்பதோ நாடாளுமன்றம்'' எனக்கூறிவெற்றி பெற்றனர். இங்கே இன்னொரு செய்தி கூறப்படல் வேண்டும் இது கோர்பச்சேவ் பற்றியது. இத்தேர்தலிலும் வரும் சனாதிபதித் தேர்தலிலும் தனக்கொரு கட்சியை அல்லது ஒரு தொகுதியைத் தன்னும் தேடிப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் இன்று 'கோர்பி' உள்ளார். முன்னாள் மேற்குலகின் செல்லப்பிள்ளையான அவரின் செல்வாக்கு இன்று ருஷ்யாவில் செல்லாக்காசாகி விட்டதாக இப்போது கூறப்படுகின்றது.

இவை ஒரு புறமிருக்க சிறினோவ்ஸ்கியின் வெற்றியானது மேற்குலகை அதிரச் செய்தது போக இன்றைய ருஷ்ய சமூகத்தின் உச்சகட்ட குழப்ப நிலையை குறிப்பதாகவே கொள்ளப்படுகின்றது. ஏனென்றால் இவர் தனது தேர்தல் பிரசார காலத்தில் கூறிய கருத்துக்கள்உலகையே ஒரு குலுக்குகுலுக்கின முறையில் முடங்கி வாழும் உலகின் புகழ்பூத்த புரட்சியின் மைந்தர்களின் மன இறுக்கத்தை தணிவிக்கஇவர்மேற்கொண்ட பிரசாரங்கள், பொய்மைகளும், புளுகுகளும் கற்பனையும் நிறைந்திருந்தாலும் மக்கள் உளவியல் ரீதியான தமது தாக்கத்தை வெளிக்காட்ட இவருக்கு ஆதரவு அளித்ததாக நாம் கருதமுடியும். ''ருஷ்யா ஒரு மாபெரும் நாடு; அது மீண்டும் தனது சாம்பல் மேட்டிலிருந்து எழும் முழங்காலிட்டு நிற்கும் ருஷ்யாவின் முதுகெலும்பு மீண்டும் நிமிர்த்தப்படும். பழைய முடிக்குரிய எழுச்சிக் காலம் உதயமாகும்'' என சிறினோவ்ஸ்கி அறை கூவினார். இது மட்டுமன்றி வெளிநாட்டவர் யாவரையும் வெளியேற்றுவேன்; ருஷ்ய எல்லைகளை விரிவாக்குவேன் என்றும்உலக வங்கியைத் தூக்கி குப்பைக்குள் வீசுவேன் என்றும் அமெரிக்கா உலகிற்கு அளித்தது சூயிங்கமும் எயிட்ஸ் நோயும் தான் என்றும் வீராப்பு வசனங்கள் பேசி ருஷ்ய மக்களை உளவியல் ரீதியாக திருப்தி செய்தார். இவ்வாறு வாய்ச்சொல் வீரராக அவர் தோற்றமளித்தாலும் இப்போது அவர் அதிகம் பேசுவதில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இப்போதிருந்தே அவர் ஆயத்தங்கள் செய்வதாக கூறப்படுகின்றது.

தேர்தல் முடிவுகள் மேற்குலகு எதிர்பார்த்தது போல் அமையாதபோதும் இப்போதுள்ள நிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 1996ம் ஆண்டே நடாத்தப்படவிருப்பதால் அப்போது ருஷ்ய பொருண்மிய மறுசீரமைப்பு மாற்றப்பட முடியாத, பின்வாங்கப்படமுடியாத நிலையை அடைந்து விடும் என மேற்குலக பொருண்மிய நிபுணர் கருதுகின்றனர். அது மட்டுமன்றி மேற்கத்தைய முதலாளியர்கள் வழங்குவதாகக் கூறியுள்ள 24 பில்லியன் டொலரும் சருவதேச நாணய நிதியத்துக்கு ஊடாகவே வழங்கப்படவிருப்பதால் யெல்ட்சினே இப்போதைக்கு ஏற்றவராக ருஷ்ய மக்களுக்கு தோற்றமளிப்பார் என்றும் கருதப்படுகின்றது. எனினும் சிறினோவ்ஸ்கியின் ஆபத்தை அவர்கள் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. எனவேதான் மேற்குலக பிரபல செய்தி இதழ்கள் இவரைப் ''பைத்தியக்காரர்'' முறையில் திருகாணி மறைகள் சில கழண்டவர் நவீன கிட்லர். சிரிக்கும் பாசிஷ்ட், கோமாளி எனப் பலவாறாக திட்டித் தீர்க்கின்றனர். அது மட்டுமன்றி, இவரைத் தேர்வு செய்ததற்காக ருஷ்ய மக்களின் மனநிலையையே நியூஸ்வீக் சந்தேகிக்கின்றது. அண்மைய அதன் இதழில் ருஷ்யாவில் சமுதாய நெறிகள் எல்லாம் தலைகீழாகி விட்டது என்றும், குடிகாரர், கொள்ளைக்காரர், சிறையிலிருந்தோர், மனநிலை பாதிக்கப்பட்டோர் எல்லாரும் இப்போது கோடீசுவரர்களாகவும், அரசியல் கதாநாயகர் ஆகவும் மாறிவிட்டனர் என நகைக்கிறது. பலவீனமான அரசு, நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள், சீர்குலைந்த சமூகநியதி, சிதறிப்போன விழுமியங்கள், சினம்கொண்டு ஆற்றாமையுடன் அலையும் மக்கள் கூட்டம் இதுவே இன்றைய ருஷ்யாவின் நிலைமையாகி விட்டது என்கிறது இவ் இதழ்.

இத்தகையதொரு நிலை நிலவும்போதே யெல்ட்சினின் பரம எதிரியான அவரை கொள்கை ரீதியாக எதிர்க்கும் அலெக்சாண்டர் ருட்ஸ்கோய் வெளிவந்திருக்கிறார். வந்தவுடனேதான் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக வேறு அறிவித்துள்ளார். சிறினோவ்ஸ்கியைப் போலல்லாது இவரும் இவரது ஆதரவாளர்களும் மிகக் கடுமையாக யெல்ட்சினின் பொருண்மிய மாற்றங்களை, உலக வங்கியின் நிபந்தனைகளை, பாரிய கைத்தொழில்களை, அரச உதவிகளை நிறுத்தி மேலைத்தேய ஊடுருவலுக்கு திறந்துவிடுதலைப் கொள்கை அடிப்படையில் எதிர்ப்பவர்கள் இவர்களது அடிப்படை பொருண்மியச் சிக்கல் தொடர்பான நிலைப்பாடுகள் மக்களைக் கவர்வனவாக உள்ளன.

உதாரணமாக உலகிலே பாரிய பெற்றோலியஉற்பத்தி நாடு ருஷ்யா. அதன் உள்நாட்டு விலையோ சருவதேச சந்தையை விட நாலில் ஒரு பங்கு குறைவானது. இப்போது உலகவங்கி இத்துறையை மேற்கத்திய முதலீட்டுக்கு ஏற்பவும் உலக சந்தை விலைக்கு ஏற்பவும் மாற்றி அமைக்குமாறு வற்புறுத்துகின்றது. இது சுரண்டலுக்கு வழி வகுக்கும் என்பதே ருட்ஸ்கோய் போன்றோரின் நிலைப்பாடு. அது போலவே அமெரிக்காவை விட வெகுவாக முன்னேறியுள்ள ருஷ்யாவின் உயர் தொழில்நுட்பத் துறைகள், விமான விண்வெளித் துறைகள் போன்றவற்றிற்கும் அரச உதவிசுளை நிறுத்தி சருவதேச போட்டி முறைமைக்குள் இவற்றினையும் தள்ளி விடுமாறு சருவதேச நாணயநிதியம் யெல்ட்சினை நிர்ப்பந்திக்கிறது. ஏனென்றால் நிதி நெருக்கடி காரணமாக ருஷ்யா தனது விமானங்களை வணிக, ராணுவத் தேவைகட்கு பயன்படுத்துவோர்க்கு விற்க முற்பட்டிருப்பதும் தனது ஏவூர்திகளை ஏனைய நாடுகளின் செய்மதிகளை அனுப்ப பயன்படுத்துவதையும் மேற்குலகம் தனக்கு போட்டியாக கருதுகின்றது. எனவே ருட்ஸ்கோய் தரப்பினருக்கு பாரிய கைத்தொழில், இராணுவ தயாரிப்பில் உள்ளோர் ஆதரவும் இன்று உண்டு.

இதே சமயம் பொருண்மிய வீழ்ச்சியானது ருஷ்யாவின் மிகச் சிக்கலான இனப் பிரச்சினையை தூண்டி விடுகிறது. ருஷ்யாவின் 152 மில்லியன் சனத்தொகையில் 40 மில்லியனுக்கு மேற்பட்டோர் ருஷ்ய பெரும் தேசிய இனத்தை சாராத இசுலாமியர், யூதர், தாத்தாரியர், மொங்கோலியர், உஸ்பெக் மக்கள் போன்றோரை உள்ளடக்கியது. இவர்களில் பலர் குமுறத் தொடங்கியிருப்பது ருஷ்ய எதிர்காலத்திற்கு உகந்ததாக இல்லை. இதுபோலவே ருஷ்ய இனத்தைச் சாராத 14முன்னாள் சோவியத் குடியரசுகளில் வாழும் 30 மில்லியன் ருஷ்ய இனத்தவர் நிலையும் மிகஇக்கட்டிலேயே உள்ளது.

எனவே இத்தகைய நிலையில் உயர் வாழ்க்கைத் தரத்தினை அனுபவித்த ருஷ்ய மக்கள் படும் பாடோ சொல்லத் தரமன்று ருஷ்யாவில் பொருண்மிய அடிப்படையில் செயற்படும் மக்கள் தொகையில் அரைப்பங்கினர் தொழிலாளர்களேயாவர்; 1993ஆம் ஆண்டளவில் வருடாந்த கைத்தொழில் உற்பத்தி 27 வீதம் விழுக்காட்டு வீழ்ச்சி பெற்றது. பண வீக்கமோ 25 வீதம் விழுக்காடு உயர்ந்தது. ருஷ்ய மக்களில் பத்தில் நான்கு பேர் தமக்குத் தேவையான உணவினைப் பெறும் அளவு பெறுமதிக்குக் கூட இப்போது வேதனம் பெறுவதில்லை. இன்னொரு நாற்பது விழுக்காடு மக்கள் தமது உழைப்பில் 90 வீத விழுக்காட்டினை உணவிற்காகவே செலவழிக்க நேரிடுகின்றது. எனவேயெல்ட்சினுக்குஆலோசனை வழங்கும் கார்வேட் பொருளியல் நிபுணர் எதிர்பார்த்தது போல மக்கள் தமது வழக்கப்பட்ட பணவுறுதிச் சீட்டினை (Vouchers) மூலதன முயற்சிகள்எதுவற்றிலும் 1992ஆம் ஆண்டின் முடிவில் முதலிடவில்லை. பதிலாக அதனை விற்றோ, அடகு வைத்தோ உயிர்வாழ்கின்றனர். மேலும் மேற்கத்தைய நாடுகள்போல ருஷ்யாவில் வளர்ந்த முதலாளிய வர்க்கமொன்று இல்லாததால் 5000 மேற்பட்ட வன்முறை இரகசிய உலக குழுக்களே மேலாதிக்கம் பெற்ற வகுப்பாக ஒருசில தொழில் முறையோடு கூட்டுச்சேரும். விபத்தும் அங்கு நேர்கின்றது; எனவே இப்போது ருஷ்யாவில் மட்டுமல்ல போலந்து போன்ற முன்னாள் பொதுவுடமை நாடுகளிலும் மாற்றியமைக்கப்பட்ட முன்னாள் பொதுவுடமைக் கட்சியினர் வெவ்வேறு பெயர்களில் வெற்றி பெறுவதும் நிகழ்கின்றது.

எனவே யெல்ட்சின் இப்போது செய்யக் கூடியது இராணுவத்தின் உதவியோடு நாடாளுமன்றை இடை நிறுத்தி தானே ஆணை பிறப்பிக்கும் தனியதிகாரியாக சந்தைப் பொருண்மியத்தை நகர்த்த வேண்டும். இதனை ஒருவேளை மேற்குலகம் சிறந்த சனநாயகச் செயற்பாடு என சான்றிதழ் கொடுக்கக் கூடும். ஆனால் இங்குள்ள இன்னொரு சிக்கல் என்னவென்றால் ருஷ்ய இராணுவமும் ருஷ்ய மக்கள் போல விரக்தியடைந்து சோர்வுற்று தக்க தலைமையின்றி சீர்குலைந்து இருப்பதே; எனவே புகழ் பூத்த பொதுவுடைமை புரட்சியின் மூத்தகுடிகள் எனப்பட்டோர் இன்று முடிவுறாத அப்புரட்சியால் மூழ்கிய மக்களாகி விட்டதே ஒரு துன்பியல் நிகழ்வாகி விட்டது.

## பூனை வளர்க்கும் குரங்கு

பாழன் குரங்கொன்று பூனைக்குட்டி வளர்க்கிறது. அநாதையாகஇருந்த பூனைக்குட்டிக்கு ஆதரவு வழங்கிய இந்தக் குரங்கு பாலூட்டி, தாலாட்டி, பாசத்துடன் வளர்த்துவருகிறது பூனைக்குட்டி குரங்குடன் துள்ளிக் குதித்து விளையாடும். அது விளையாடுவதைக் கண்டு மகிழும் குரங்கு சற்றுக் கண்டிப்புடனும் வளர்த்து வருகிறது

**ஈழநாதம்**
நான்காம் ஆண்டு நிறைவுப் போட்டியில்
மூன்றாம் பரிசு பெற்ற சிறுகதை

# சிறுகதை

# ஆயுதம்

விஜயா

'உந்தத் துவக்கு என்ன விலை தம்பி?'

வசீகரனின்சுரண்டல் சோமண்ணையை வாய் திறக்க வைக்கிறது. 'இதோ ஐயா...? இருநூற்றைம்பதுரூபாய்தான் இப்படிச்சாமான் இப்ப வரத்தில்லை. சுடுறன்பாருங்கோ...'

சட சட சட் சடக்...

'போனாக் கிடைக்காது ஐயா. தம்பிக்கு வாங்கிக் குடுங்க. இப்பவே 'றெயினிங்' எடுக்கட்டும்'

கடைக்காரன் விளையாட்டுத் துப்பாக்கியை எடுத்து சுட்டுக் காட்டி, வாயாலும் வாலாயம் போட்டு சோமண்ணையை மடக்கும் முயற்சியில் துவக்கை வசீகரனிடம் கொடுத்து 'சுட்டுப்பார் தம்பி' என்கிறான்.

வசீகரன் ஆசையோடு துவக்கை வாங்கி புறாக்குஞ்சைத் தடவும் வாஞ்சையோடும் இலாவகத்தோடும் அதனை வருடி விசையை அழுத்திப் பார்க்கிறான். இயந்திரத் துப்பாக்கி ஓசையின் போலி 'சட சட சட் சடக்...' என்கிறது.

சோமண்ணை மனக் கணக்கில் மூழ்கி நிற்கிறார் வரும்போது கொண்டு வந்தது இரண்டாயிரம். நான்குநாட்களைக் கடத்தியாயிற்று. நாளைகக்கு தீர்த்தம் முடிந்ததும் புறப்பட வேண்டும். பூநகரி போய்ச் சேர வேண்டும். எஞ்சியிருக்கிற ஐந்நூறு ரூபாயில் துவக்குக்கு இருநூற்றைம்பதை கொடுத்தால் ஏனைய அலுவல்களை எப்படி முடிப்பது?

வசீகரன் துடியன்... பிடிச்சால் பிடிச்சதுதான்...தேவையில்லாமல் ஒன்றும் கேட்கவும் மாட்டான்; கேட்டால் விடவும் மாட்டான்.

அண்ணைமார் கொண்டு போற துவக்குகளைப் பார்த்து, அவர்களோடு சினேகிதம் பிடித்து அந்தச் சிநேகிதத்தில் துவக்குகளைத்தொட்டுப் பார்த்து, அப்புறம் ஒரு நாள் தூக்கிப் பார்த்து, அது போல் ஒன்றை தானும் வைத்திருக்கவேண்டுமென்ற ஆசை கனலாக கொழுந்து விட்டு, நல்லூர்த் தேரில், துவக்கைக் கண்டதும் அப்பாவை இழுத்து நிறுத்தி விலைகேட்க வைத்திருக்கிறான் வசீகரன்.

சோமண்ணை ஒரு முடிவுக்கு வந்தவராய் கடைக்காரனைக் கேட்கிறார். 'நூற்றைம்பது போடுமன் தம்பி. அதுக்கு மேல தர எனக்குக் கட்டாது'

கடைக்காரன் வசீகரனிடம் கொடுத்த துவக்கை பிடுங்காத குறையாக வாங்கிக் கொள்கிறான். 'என்னையா முதலுக்கும் வராத விலை கேட்கிறியள்? இருநூற்றி இருபத்தைஞ்செண்டால் எடுங்க. வேற ஒருடமும் வாங்க மாட்டியள்'

சோமண்ணை யோசித்துக் கொஞ்சம் ஏறினார். 'இருநூறெண்டால் தா'

வசீகரன்அவரது இடுப்பைச் சுரண்டி 'அப்பா' என்றான். இரக்கிற தொனி. கடைக்காரன் துவக்கை மீண்டும் அலங்காரமாய் தொங்க விட்டான். 'இருநூற்றி இருபத்தைஞ்செண்டால் எடுங்க; அதுக்குக் குறைஞ்சால் முதலுக்கே மோசம்..'

சோமண்ணை இடத்தை விட்டு நகரலானார். 'யாவாரியள் உப்பிடித்தான் நிணடு பேரம் பேசினால் இறங்காங்கள். விட்டுட்டுப் போனால் கூப்பிடுவாங்கள்' 'அவர் இரண்டடி நகர்ந்திருக்க மாட்டார். அவர் நினைத்தபடியே கடைக்காரன் கூப்பிட்டான். 'என்னையா விட்டிட்டுப் போறியள்...? சரி பறவாயில்லை வாங்க. தம்பிக்கு வாங்கிக் குடுங்க... இருநூறைத் தாங்க...'

இருநூறுக்குவாங்கலாமா... என சோமண்ணை யோசிப்பதற்குள் அவரது கையில் காசை வைத்தான் வசீகரன். 'அப்பு, இருநூறுக்கு வாங்கித்தா'

சோமண்ணை ஒருகணம் மலைத்து, இவனிடம் எப்படிக் காசு வந்தது என யோசித்து, யோசனையூடே ஈரடி காலைப்பின் வைத்து, கடைக்காரனிடம் காசைக் கொடுத்து. துவக்கை வாங்கி வசீகரனிடம் ஒப்படைத்து விட்டார்.

'அப்பு வருஷத்துக்கு கிடைச்ச கைவிசேசக் காசுகள், அம்மன் கோவில் திருவிழாவுக்கை மாமி தந்த காசு, இப்படி எல்லாத்தையும் ஒரு மாதிரிச் சேத்து வந்தனான் அப்பு. துவக்கு வேண்ட நினைச்சுத்தான் கொண்டு வந்தனான் அப்பு. வாங்கிப் போட்டன். இன்னும் பத்து ரூபாய் இருக்கு. உனக்கு வேணுமே அப்பு '

அவன் வீதி நெடுக துள்ளிக் கொண்டே அவரோடு பேசிக் கொண்டு வந்தான் துவக்கிலும் இடையிடையே வெடி வைத்தான்.

இவன்கெட்டிக்காரன்தான். ஒரு இலட்சியத்தோடு சிறுகச் சிறுக சேர்த்து, யாருக்கும் தெரியாமல் கொண்டு வந்து என்னில் தங்காமல் தானே பொருள் கொடுத்துப் பொருள் வாங்கி— சோமண்ணைக்கு நினைக்க நினைக்க பெருமிதமாய் இருந்தது.

கிராமத்தில் அவனுடைய துவக்கு அவனுக்குப் பெருமை சேர்த்தது. அவனைச் சுற்றி நண்பர்கள் குவிந்தனர்; 'ஒருக்கா தாடா சுட்டுப் பார்க்க' என்ற கோரிக்கைகளும் கெஞ்சல்களும் எழுந்தன. ஐஞ்சு நிமிஷம் தருவியெண்டா பத்து மாபிள் தருவன்' என்ற பேரங்கள் பேசப்பட்டன. துவக்கோடு அவன் வீதி உலா வந்தான். 'கவர்' எடுத்தான்- வருகிறவர் போகிறவர் எல்லோரையும் ஆமிக்காரனாய் எண்ணிக் குறிபார்த்து சுட்டுத் தள்ளினான்- சப்தத்தை மட்டுமே உண்டாக்குகிற துவக்கு மனிதர்களைச் சாகடிக்கவில்லை- வசீகரனின் கணக்கில் கிட்டத்தட்ட அறுநூறு ஆமிக்காரர் செத்த போது அண்ணைமாரின் குழு ஒன்று 'கனடா மாமி' வீட்டில் முகாமிட வந்தது. வந்தவர்களுக்கு இவனையும், இவனுக்கு என்றும் போல் அவர்களையும் பிடித்துப் போயிற்று-

அண்ணை என்ரை துவக்கைப் பாத்தியளே...? எப்படி?

'அச்சா துவக்கடா தம்பி- உந்த 'மொடல்' எங்களிட்ட கூட இல்லை- நீ எங்க வாங்கினனீ? என்ன விலை ?' ஒய்வான ஒரு வேளையில் பொறுப்பாளர் அவனோடு விளையாடுகிறார்-

'நல்லூரில் வாங்கினனான் அண்ணை- இருநூறுரூபாய்- என்ரை சொந்தக் காசில வாங்கினனான்'

'நீ கெட்டிக்காரன்ரா'

'இதால அறுநூறு ஆமிக்காரங்களை விழுத்திப் போட்டன் தெரியுமே..'

பொறுப்பாளர் ஒரு கணம் அயர்ந்து மறுகணம் விளங்கி அவனது முதுகில் தட்டிச் சிரிக்கிறார்-

'அண்ணை, உங்கடை துவக்கு என்ன விலை...?'

'இதுக்கு விலை மதிப்பிட ஏலாது தம்பி' அவரின் உள்ளார்த்தம் வசீகரனுக்கு பிடிபடவில்லை.

'ஏனண்ணை?'

'ஒவ்வொரு எதிரியைவிழுத்தேக்கையும் இந்தத் துவக்கு குறைஞ்சது இரண்டு லட்சம் இரண்டு லட்சமாய் விலை ஏறிக்கொண்டு போகும்...'

'நீங்க எத்தனை பேரை விழுத்தினனீங்க ?'

'அதை நான் தம்பிக்கு இன்னொரு நாளைக்கு சொல்லுறன்'

'அண்ணை, பகிடியை விட்டிட்டு சொல்லுங்க உங்கடை என்ன விலை வரும்?'

பொறுப்பாளர் வசீகரனின் வயிற்றில் செல்லமாகக் குத்தினார். 'ஒரு அம் தினாயிரம் வருமெண்டு வையன்...'

அம்பதினாயிரம்-

வசீகரன் மலைத்து நின்றான். ஒரு இருநூறு சேர்க்கவே நான் பட்டபாடு... அம்பதினாயிரம் சேர்க்கிறதெண்டால்...?

பிறிதொரு நாள் அவன் பொறுப்பாளரைப் பிடித்துக் கொண்டான்-

'அம்பதினாயிரம்கட்டாயம் வேணுமோ அண்ணை ?'

'ஏனடா ?'

'உங்கட துவக்கு வாங்க '

'பொறுப்பாளர் அவன் சொன்னதற்கு தன் இயல்பை மீறி உணர்ச்சி வசப்பட்டார்- கண்கள் கலங்க அவனையே உற்றுப் பார்த்தார்-

'அண்ணை சொல்லுங்கோவன்...'

வசீகரன் உலுக்கினான்-

'நீ எங்களோட வந்தா நாங்க சும்மாவே தருவம்- காசு தேவையில்லை- வாறியோ...?'

'நான் உங்களோட வந்தால் 'அம்மாவும் அக்காவும் அழுவினம்'

'அப்பா ...?'

'அவர் என்ன செய்வாரெண்டு தெரியாது'

'உனக்கெத்தினைவயது ..?'

'ஒம்பது... நாலாம் ஆண்டில் படிக்கிறன்'

பொறுப்பாளர் வசீகரனின் முதுகைத் தடவினார். 'நீ படியடா காலம் வரேக்கை நான் உன்னைக் கூட்டிக் கொண்டு போய் துவக்குத் தாறன்- அல்லது நீயே வந்து எடுத்துக் கொள்- அதுவரை உனக்காக ஒரு துவக்கை கையிருப்பில் வைச்சிருக்கிறன்'

ஃ ஃ ஃ

வசீகரனைப் பொறுத்தவரையில் காலம் வேறு விதமாய் போயிற்று-

அவனது கிராமம் திடீரென எதிரிகளின் பாசறையாயிற்று-

மக்கள் இடம் பெயர்ந்தவர்களானார்கள்-

வெளியேறும் அமளி துமளியில் அவன் தன்னுடைய விளையாட்டுத் துவக்கையும் இழந்து வந்தான்- அகதி முகாம் வாழ்க்கையில் காலம் நொண்டியடித்தது-

அன்று அடுத்த கொட்டிலில் தைனமோ சுற்றி ரேடியோ கேட்டுக்கொண்டிருந்தார்கள்- அவன் காது கொடுத்தான்-

... மானிடர் ஆன்மா மரண
மெய்தாது
மறுபடி பிறந்து நிற்கும்
மேனியைக் கொல்வாய்
மேனியைக் கொல்வாய்
வீரத்தில் இதுவும் ஒன்று
நீ விட்டு விட்டாலும்
இவர்களின் மேனி
வெந்துதான் தீரும்
ஓர் நாள்...

'அப்பு உது இயக்கப் பாட்டு மாதிரி இருக்கு தெல்லோ...?

'இல்லைத் தம்பி உது கண்ணன்போர்க் களத்தில செய்த கீதோபதேசம்- படத்துக்காக அந்தக் கருத்தை வைச்சு தமிழில பாட்டு எழுதியிருக்கினம்'

வசீகரன் தலையைச் சொறிந்து கொண்டான்-மாவீரர்மரணிப்பதில்லை என்பார்களே... அது போலவா? வித்துடல்கள் விருட்சங்களாகஎழும்என்பார்களே... அதற்கும் இந்தப் பாட்டிற்கும் சம்பந்தம் உண்டா?-அவன் தனது பதினொரு வயதில் நெடுநேரம் குழம்பினான்- வெளியே வானம் இருண்டு மழையைக் கொட்டி தீர்த்துக் கொண்டிருந்தது- துவக்கை இழந்த பின்னர் தேடிக் கொண்ட புதிய ஆயுதம் 'கெட்டப் போல்' என்கிற கவண்தடி இடுப்பில் சொருகியிருக்க, சாக்கின் மீது தகப்பன் அருகே தூங்கிப் போனான் வசீகரன்-

முகாமின் கூச்சல்கள் அவனை விழிக்க வைத்த போது பொழுது விடிந்துவிடவில்லை- அப்பா அவனருகே உட்கார்ந்து சுருட்டு பற்ற வைத்துக் கொண்டிருந்தார்- அம்மாவையும் அக்காவையும் பாயில் காணவில்லை- தூரத்தே குண்டுச் சப்தங்கள்- விதம் விதமான துப்பாக்கிகளின் சண்ட மாருதங்கள்- ஹெலியின் இரைச்சல்

'எங்கையப்பா சத்தம்கேட்குது...?'

'எங்கடை ஊர் பக்கந்தான் கேட்குது- தம்பியவை புகுந்திட்டினமாம்...'

'அப்ப நாங்களும் ஊருக்குப் போகலாம்... என்னப்பா?'

'கெதியில போகலாம்போலதான் கிடக்கு. வா வெளியில போவம்- ஹெலியால இருட்டில தணல் மாதிரி சன்னம் கொட்டுறதைசனம்வேடிக்கை பார்க்குது'

அவன் அவரது கையைப் பற்றிக் கொண்டான்-

விடிந்து விட்டது-

சைக்கிள் சில்லும் தைனமோவும் பக்கத்துக் கொட்டிலில் அன்று முழுவதும் ஓயாது சுழன்றன- செய்திகள்... புதுப் புதுச் செய்திகள்... நிறையச் செய்திகள்... நிலத்தில் கால் பரவவிடாது வைக்கிற செய்திகள்... நெஞ்சைப் புல்லரிக்க வைக்கிற செய்திகள்...

வானத்தில் பொம்மர்கள் விரைந்தன- ஹெலிகள் மழை மேகங்களை நீண்ட கரங்களால் வெட்டிச் சரித்தன-

வசீகரன் கவணை எடுத்துக் கொண்டான். பேசிக்கொண்டேயிருந்தால் வயிற்றுப்பாடு என்ன ஆவது?

முகாமை அண்டி விரிந்து கிடக்கும் காடு. பெரும்பாலும் பற்றையாயும் சில இடங்களில் மர அடைசலாயும் பரந்த காடு.

ஒரு காட்டு முயலோ, கானாங்கோழியோ, புறாவோ கவண்கல்லுக்கு இரையானால் மழைநேரச் சாப்பாடு கொஞ்சம் ருசியாயிருக்கும் என யோசித்தபடி பழகிய தடங்களில் பூனை நடையில் கழுகுப் பார்வையோடு நடந்து போனான் அவன்.

அரைக்களிசானின் இரண்டு பைகளும் கவண் கற்கள் நிறைந்து உப்பிக் கிடக்கின்றன. அவனின் ரவைக் கூடுகள்.

முயலார் இரண்டு மூன்று தரம் அவனுக்குப் பாய்ச்சல் காட்டி விட்டார்-

எனக்கு முயலைக் கண்டால் குறிபார்த்தடிக்க பாபமாய் கிடக்கு. என்ன வடிவான முயல்... ஓம் மனமில்லாட்டி குறி சரிவராதுதான்.

வசீகரன் தன் நினைவுகளை எண்ணி சிரித்துக் கொண்டான். 'ஆனா' பாவம் பார்த்தா வாழேலாது...?'

சட்டென அவனது காதுகள் கூர்மையாயின

கூப்பிடு தொலைவில் அது என்ன சரசரப்பு?

ஏதும் பெரிய மிருகமோ...?

இந்தக் காட்டில பெரிய மிருகம் அதிகம் வாறதில்லை. அப்ப உதென்ன...?

எச்சரிக்கைத் தூண்டல்இயக்க 'கவறிங்' எடுத்து விளையாடிய பழக்கம் அவன் மரத்தோடு மரமாய் மறைந்து கொண்டான்.

உதென்ன வாயிருக்கும்...?

பெருங்காட்டிலிருந்து ஏதென்தப்பிவந்திட்டுதோ...?

நான் திரும்பி சப்தமில்லாமல் பின்வாங்க வேண்டுமோ?

அல்லது-

அவனது மூளையில் ஆபலறி ஷெல்லின் இடை வெடிப்பு ரேடியோவில சொன்ன மாதிரி... அப்படியு மிருகுமோ... வசீகரன் கவணின் வாரை சப்தமின்றி இழுத்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

**ஈழநாதம்**
நான்காம் ஆண்டு நிறைவுப் போட்டியில்
மூன்றாம் பரிசு பெற்ற கவிதை

## நாளை வரலாறு

காதுவரை சென்றவிழிக் கன்னி முகநிலவினையும்
கார்முகிலை நிகர்க்குமவள் வார்குழலின் அழகினையும்
ஆகாயப் பவனிவரும் அழகுநிலா எழிலினையும்
பாகாய் உருகுமிளங் காதலரின் பிதற்றலையும்
தேனாக்கி அமுதாக்கி மோனையொடு எதுகைசந்தம்
தூசளவும் பிசகாமல் பாடி விருதுகளும்
பாராட்டும், கைதட்டும் பெறுங்கவிஞ! உன்வீட்டில்

கதவோரம் உன்தங்கை கன்னியாய் மூச்செறிய,
கஞ்சிதனும் இல்லையென உன்மகன் தாய்முகம்நோக்க
ஆகாயம் தெரியுமுன்தன் கூரைவழி வெயிலெறிக்க
ஆகாத வார்த்தைகளால் மனைவிபஞ்சப் பாட்டிசைக்க
பேணாமை திர்த்தனையே பேதமையை என்னென்பேன்

வான்வெளியில் வானூர்தி வட்டமிட்டுக் குண்டெறிய
ஊண்வகைகள் கொண்டுவரும் பாதையெலாம் பறிபோக
ஓடெல்லாம் ஹெலியடித்து ஓட்டைவழி மழைபொழிய
காடுகடல் வளமெல்லாம் காக்கியுடை ஆக்ரமிக்க
பாடுவதா பாவையெழில்; வானழகு; காதல்மொழி?
பாவலனே, உன்பேனாப் பாதையினை மாற்றிவிடு.

காலத்தின் கண்ணாடி கவியாக வேண்டுமப்பா,
வாளுக்கு மேலான வலியுனது பேனையப்பா,
காலத்தின் தேவையினை. கடமையினை உணர்வுதனை
நாளை வரும் சந்ததிக்கு நற்கவியாய் வடித்திடப்பா.

''எமதுகடல், வயல், காடு எமதுகுடி எமதெல்லை
எவனொருவன் தீண்டுவது'' எனவெழுந்த மறவர்களின்
தினவெடுத்த தோளினையும், தியாகத்தின் மாண்பினையும்
துகள்பறக்க களமாடி தமிழ்நெஞ்சில் நிலையாக
துயில்கின்ற மாவீரர் புகழினையும் வடித்திடு - உன்
கவிநாளை தமிழ்நூலின் வரலாறு ஆகுமப்பா
வருகின்ற தமிழீழம் வாழ்த்துமுன்னை வாஞ்திர!

வே. இளையகுட்டி

# பொது வாழ்வில் பெண்களின் தலைமைத்துவம்

கடந்த பல வருடங்களாக பெண்களுக்குச் சம உரிமை கோரியும், பெண்களின் உரிமையைப் பிரகடனப்படுத்த வலியுறுத்தியும் பல அமைப்புகள்போராடிவந்ததன் காரணமாகபெண்களின்உரிமைகளை ஐக்கிய நாடுகள் மன்றம் அங்கீகரித்துள்ளது. இது தொடர்பான ஒரு பிரகடனத்தையும் ஐ. நா. மன்றம் 1967இல் வெளியிட்டது. பெண்களின் அந்தஸ்து தொடர்பாக ஐ. நா. ஆணைக்குழு பரிந்துரைத்த அரசியல் - பொருளாதார சம உரிமை, வாக்குரிமை, தீர்மானம் நிறைவேற்றும் பொறுப்பு ஆகியவற்றைப் பல நாட்டுச் சட்டங்கள் அங்கீகரித்துள்ளன.

அநேகமாக அனைத்து நாடுகளிலும் ஆண் - பெண் ஏற்றத்தாழ்வுகள் குறைந்துள்ள போதிலும் அதன் மிச்சசொச்சங்கள் இன்னும் சில நாடுகளில் நிலைத்துள்ளன. பெண்களின் உரிமை குறித்த சட்டங்கள் சில நாடுகளில் சட்ட வாக்கங்களாகவே உள்ளன. சட்டங்கள் ஒரு ஒழுங்கமைப்பில் செயற்படுத்தப்படுவதில்லை. இதனால் பல நாடுகளில் உயர் மட்ட அரசியல் மற்றும் பொருளாதார விஷயங்களில் பெண்களின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது என்று ஐ. நா. தரவுகளிலிருந்து தெரிய வருகிறது.

மறுபுறம், ஐ. நா. மன்றத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள மொத்தம் 159 நாடுகளில், 1990 முடிய ஆறு நாடுகளில் மாத்திரம்(3.8 விகிதம்)பெண்கள் அரசைத் தலைமைதாங்கி நடத்தியுள்ளார்கள். ஐஸ்லாந்து, அயர்லாந்து, நிகாரகுவே, நோர்வே, டொமினிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலேயே 1990 முடிய பெண்கள் ஆட்சித் தலைவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். உலகில் அமைச்சர் அவைகளில், கபினற் அமைச்சர் தரத்தில் 3.5 விகிதமான பெண்கள் அமைச்சர்களாக உள்ளார்கள். உலகில் 93 நாடுகளில் அமைச்சரவையில் பெண்களுக்கு இடம் தரப்படவில்லை. நிர்வகிக்கும் ஆற்றலும், அறிவும் அவர்களுக்கு இருந்த போதிலும், ஆண் அரசியல்வாதிகளுக்குக் கிடைக்கிற அங்கீகாரம் பெண் அரசியல்வாதிகளுக்குக் கிடைப்பதில்லை.

ஏறக்குறைய உலகில் எல்லா நாடுகளிலும் ஆண்களுக்கு வழங்கப்படும் அமைச்சர் பதவிகளுக்கு நிகராகப் பெண்களுக்கு அமைச்சர் பதவிகள் தரப்படுவதில்லை. கல்வி, கலாசாரம், சமூகசேவை, சுகாதார அமைச்சர் பதவிகளே வழங்கப்படுகின்றன. இன்னொரு பக்கம், சில நாடுகளில் சட்டம் மற்றும் நீதித் துறைகளில் பெண்கள் பிரவேசம் செய்துள்ளார்கள். சோவியத் ரஷ்யா (முன்னாள்) நீங்கலாக, வளர்ச்சி அடைந்த நாடுகளில் 12 முதல் 14 சத விகிதம் பெண்கள் சமூக மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு சமூக சேவைகள் தளத்தில் சேவையாற்றுகிறார்கள். மற்றும்படி, மேற்கு ஆபிரிக்காவில் 9 சத விகிதம் பெண்களும், உலகில் ஏனைய பகுதிகளில் 6 சத விகிதம் அல்லது அதற்குக் குறைந்த அளவிலான பெண்களும் இத்துறையில் கையை நனைத்துள்ளார்கள். ஒட்டுமொத்தமாக பார்த்தால் ஆசியா, ஆபிரிக்கா, பசுக் பிரதேசங்களில் நிறைவேற்றுத்துறை, பொருளாதாரம், அரசியல், சட்ட அமைச்சுகளில் பெண்கள் பங்களிப்பு மிகவும் தாழ்வாகவே உள்ளது. உலக நாடுகள் அனைத்திலும் பாதுகாப்பு, பொருளாதாரக் கொள்கை வகுத்தல், அரசியல் விவகாரம் ஆகிய முக்கிய துறைகளில் ஆண்களே ஆழமாக வேரூன்றி உள்ளார்கள். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பதவிகள் பெண்களுக்குத் தரப்படுவதில்லை.

உலகில் 49 நாடுகளில் முக்கிய தீர்மானங்களை எடுக்கும் உயர்மட்ட அரச பதவிகள் பெண்களைப் பொறுத்தவரையில் எட்டாக் கனியாகவே உள்ளன. ஆபிரிக்கா கண்டத்தில் 21 நாடுகளிலும், கரேபியன், ஆசியா மற்றும் பசுபிக்கில் மொத்தமாகப் 16 நாடுகளிலும், ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் 4 நாடுகளிலும் தீர்மானம் மேற்கொள்ளும் உயர்மட்ட அரச பதவிகளில் பெண்கள் நுழைவதற்குக் கதவுகள் சாத்தப்பட்டுள்ளன. தவிர, பூட்டான், டொமினிக்கா, நோர்வே ஆகிய மூன்று நாடுகளில் மாத்திரம் 20 சதவிகிதம் அமைச்சு உத்தியோகங்களில் பெண்கள் கடமையாற்றுகிறார்கள்.

விரல் விட்டு எண்ணக்கூடிய நாடுகள் - பஹமாஸ், பார்படஸ், டொமினிக்கா, பின்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளில் அரச தீர்மானங்களில் தமது அழுத்தத்தைப் பிரயோகிக்கக் கூடிய பதவிநிலை உத்தியோகத்தர்களாகக் கடமை புரிகிறார்கள். மரபு ரீதியான பணிகளில் பெண்கள் ஈடுபட்டுவரும் வடஆபிரிக்கா, கிழக்கு மற்றும் மேற்கு ஆசிய நாடுகளில் தீர்மானம் எடுக்கும் பதவிகளில் பெண்களின் அந்தஸ்து ஒன்றும் பெரிதாயில்லை.

ஆண்களைப்போல் பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுளளது. தேர்தலின்போது பெண்கள் வாக்களிக்கவும் செய்கிறார்கள். இதில் அதிசயம் என்னவென்றால், பெண்கள் வாக்களிக்கும் விகிதாசாரத்திற்கு அமைவாக அவர்களுக்குப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை. பெண்களின் பிரதிநிதித்துவம் நாடுகளின் அரசியல் தள நிலையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வரலாற்றுப் போக்கிலும் தங்கியுள்ளது. 1987 இல் கிழக்கு ஐரோப்பா மற்றும் சோவியத் ரஷ்யப் பாராளுமன்றங்களில் பெண்கள் அதிகளவில் பாராளுமன்றஉறுப்பினர்களாக இருந்தார்கள். மேற்படி பாராளுமன்றங்களில் சுமார் 28 சத விகிதம் பெண் உறுப்பினர்கள் இடம்பெற்றார்கள். ஆனால், கிழக்கு ஐரோப்பாவிலும், சோவியத் ரஷ்யாவிலும் ஏற்பட்ட எதிர்ப்புரட்சிகள், ஆட்சிக் கவிழ்ப்புகள் அந்த நாடுகளில் பெண்களின் நிலையைப் பலவீனப்படுத்தி உள்ளன. அரசியல் குழப்பங்களுக்குப் பிறகு கிழக்கு ஐரோப்பா மற்றும் ரஷ்யாவில் நடைபெற்ற தேர்தல்களில்பெண் வேட்பாளர்கள் குறைவாகவே தெரிவானார்கள்.

நோர்டிக் நாடுகளில் (வட மேற்கு ஐரோப்பா) அரசியல் வாழ்வில் 1975 க்கும் 1987க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பெண்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தில் ஓர் ஆரோக்கியமான சூழ்நிலை கர்ணப்பட்டது. இந்த நிலை இப்போதும் தொடர்கிறது.

## அரசியலில் பங்கெடுத்தல்

பெண்கள் தீர்மானம் எடுக்கும் பதவியை எட்டுவதற்கு இரு வழிகள் உள்ளன. ஒன்று அரசியல் பிரவேசம் மற்றது நிர்வாக சேவை. தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் சார்பு அமைப்புகளில் பெண்களின் அந்தஸ்தை அவர்களது சமூக நிலை தீர்மானிக்கிறது. சமூகப்பின்புலம் பலமாகஇருந்தால்தலைமை பெண்களைத் தேடிவருகிறது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளை எடுத்துக் கொண்டால் சர்வதேச சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்தில்இணைந்துள்ள தொழிற்சங்கங்களில் கணிசமான அளவில்பெண்கள் அங்கத்தினராய் உன்ளனர். இச்சங்கங்களில் அவர்களது உறுப்புரிமை 30 சத விகிதம் என்று கணிக்கப்பட்டுள்ளது. அவ்வாறிருந்தும் தொழிற்சங்க அமைப்புகளில் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரமுள்ள பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படுவதில்லை. டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளில் பெண்களின் அங்கத்துவம் 50 சத விகிதத்திற்கும் அதிகமானது. அவுஸ்திரியா, பெல்ஜியம், ஐயர்லாந்து, இத்தாலி, இங்கிலாந்து 30 முதல் 33 சதவிகிதம் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு (இணைப்புக்கு முன்) 22 சத விகிதம் லக்ஸ்சம்போர்க் மற்றும் நெதர்லாந்து 10முதல் 15 சதவிகிதம் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பிரதான அரசியல் கட்சிகளில் பெண்களின் உறுப்புரிமை 25 முதல் 45 சதவிகிதம் வரை உள்ளது. ஆனால் கட்சித் தலைமைப் பதவிகளுக்குப் பெண்கள்தெரிவாவது மிகவும் குறைவு.

## சமூக மற்றும் அடிமட்ட நிலைச்சேவைகள்

அரசியல் தலைமைத்துவத்தில் பெண்கள் ஒரே சீராய் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் சமூக சேவை அமைப்புகளில் பெண்களின் பங்கு அதிகரித்துக் காணப்படுகிறது. குடும்ப உறுப்பினர் என்ற வகையில் குடும்பத்தின் சுகவாழ்விற்கும் நலத்திற்கும் பொறுப்பாக உள்ள அவர்களது பண்புதான் இந்தத் துறையில் அவர்கள் நுழையக் காரணம் என்று அனுமானிக்கப்படுகிறது. சூழல் பாதுகாப்பு மற்றும் சமாதானப் பணிகளில் பெண்களின் ஈடுபாடு குறித்தும்பல உதாரணங்கள் உள்ளன. மலேசியாவில் நச்சுக் கிருமிநாசினி வீசுதல், மற்றும் கழிவுப் பொருட்கள் குறித்தபோராட்டத்தில் பெண்கள் முன்னணியில் உள்ளனர். கென்யாவில் காடுநடுதல் மற்றும் பசுமை இயக்கத்திலும்' இந்தியாவில் சிப்கோ அன்டோலன் அமைப்பிலும் பெண்கள் பங்களிப்பு அதிகம். கிராமமட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்புகள் காலப்போக்கில் செல்வாக்கான இயக்கங்களாகப் பரிணமித்துள்ளன. அமெரிக்காவில் லவ்களால் குடியிருப்புப் பகுதியில் கழிவுப் பொருட்கள் கொட்டியதைக் கண்டித்துஅமெரிக்கஅரசுக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கப் பெண்கள் நடத்திய போராட்டம் பிரசித்தமானது. சூழல் பாதுகாப்பு அமைப்புகளில் பல பெண்கள் முன்னணியில் உள்ளார்கள். ஆனால் ஐ. நா. சூழல் பாதுகாப்புத் திட்டம் 750 சூழல் பாதுகாப்பாளர்களுக்கு விருதுகள்வழங்கிக் கௌரவித்துள்ளது. ஆனால் இதில் 12 பேர்தான் பெண்கள் என்பது விசனத்துக்குரியது.

## பொதுத்துறைப் பணிகள்

பொதுத்துறை (அரச) உத்தியோகங்களில் தொழில்பாதுகாப்பு, முன்னேற்றம், பதவி உயர்வு ஆகியவை மூலம்வரும் தன்மைகள் குறித்துப் பெண்கள் இத்துறையினை நாடுவது சகஜம். வளர்முக நாடுகள் மற்றும் வளர்ச்சியடைந்தநாடுகள்பின்லாந்துமெக்ஸ்சிக்கோ, டென்மார்க், பிலிப்பயின்ஸ், சுவீடன் நாடுகளில் பொது நிர்வாகத் துறையில் பெண்களுக்கு அதிகளவில் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இத்துறையில் இந்நாடுகளே முன்னணியில் உள்ளன. ஆனால் அநேகமான நாடுகளில் பொதுத் துறை முதலீட்டு நிறுவனங்களில் பெண்கள்அரிதாகவே நியமனம் பெறுகிறார்கள். உதாரணமாக அர்ஜன்ரீனாவில் பொதுத்துறை முதலீட்டு முயற்சிகளுடன் பெண்கள் தொடர்பற்றவர்களாகவே இருக்கிறார்கள். பொது நிர்வாக உத்தியோகத்திற்கு ஆள் சேர்க்கும் போதும் ஆண்களை விடக் கூடிய கல்வித்தராதரம் உள்ள பெண்களுக்கே வேலை வாய்ப்புக் கொடுக்கும் வழக்கம் பின்பற்றப்படுகிறது.

இனி திணைக்கள உயர் அதிகாரிகள் ஆளணி பற்றிய தரவுகள் பொதுவாகக் கிடைப்பதில்லை. இத்துறையில் பெண்களுக்குக் கீழ் நிலைப் பதவிகளே வழங்கப்படுகின்றன. பல நாடுகளில் பெண்கள் உழைப்புக்கும் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்துக்கும் தொடர்பில்லை. ஆண்களின் தொழிலுக்குச் சமச்சீரான தொழிலைப் பெண்கள் செய்தாலும் 30 முதல் 40 விகிதம் குறைவான சம்பளமே வழங்கப்படுகிறது. இந்த முறையானது பெண்களின் உழைப்பைச் சுரண்டும் தன்மை கொண்டதாகக் கருதப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் கூட தற்காலிக ஆசிரியர் தொழில் என்ற பெயரில் பெண் ஆசிரியைகளுக்கு 350 ரூபா வரை சம்பளம் வழங்கும் பரிதாப நிலையும் உள்ளது. இதனை எவரும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

**மதன்**

உலக நாடுகளுக்கெல்லாம் முன் மாதிரியாக இருக்கவேண்டிய ஐ.நா. மன்றத்திலும் இதே நிலைதான். ஐ.நா.மன்றத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் பெண்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். தீர்மானம் எடுக்கும் உயர்மட்ட உத்தியோகத்தில் 3:6 விகிதமானவர்களே பெண்கள். மிகுதி இடங்களை ஆண்களே ஆக்கிரமித்துக் கொண்டுள்ளார்கள். தீர்மானம் எடுக்கும் மட்டத்திற்கு அடுத்த மட்டத்தில் உள்ள உத்தியோகங்களுக்கும் பேட்டிப் பரீட்சை மூலம் ஆள் சேர்க்கும் கனிஷ்ட நிலை உத்தியோகங்களுக்கும் கணிசமான அளவு பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

## பொருளாதாரத் தீர்மானம் எடுக்கும் பதவிகள்

நிதி அமைச்சுகள், மத்திய வங்கிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் பெண்கள் தாழ்வான எண்ணிக்கையிலேயே வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இத்துறைகள் சார்ந்த நிர்வாக மற்றும் மேலாளர் பணிகளில் 2 முதல் 3 வீதமானவர்களே பெண்கள். கரேபியன் பிரதேசத்தில் நிர்வாக மற்றும் மேலாளர் பதவிகளில் பெண்கள் 20 சத விகிதமாக உள்ளனர். இது வளர்ச்சியடைந்த நாடுகளில் 18 சத விகிதமாகவும், ஆபிரிக்காவில் 13 சத விகிதமாகவும், ஆசியாவிலும் பசுபிக்கிலும் 10 சத விகிதமாகவும் உள்ளது.

பெண் - ஆண் சமத்துவத்தில் இவ்வாறு பல விதமான சரடுகள் பின்னிக் கிடக்கின்றன. இருபாலாருக்கும் இடையில் சமத்துவம் என்று பேசிக் கொண்டாலும், அதனைஜனநாயக ரீதியில் அர்த்தம் பண்ணிக் கொள்ள மறுக்கும் அசட்டுத்தனங்கள் பொது வாழ்வில் வெகுவாகச் செயல்படுவது கண்டனத்துக் குரியது.

தரவு: UNFPA UNIFEM

## 20-ம் நூற்றாண்டில் ஆட்சிப் பொறுப்பில் பெண்கள்

### ஜனாதிபதிகள்

| | |
|---|---|
| அக்கினோ | — பிலிப்பைன்ஸ் |
| விக்கிடிஸ் பினபோகாட்டியர் | — ஐஸ்லாந்து |
| வயலெற்றா சாம்மறோ | — நிக்காருகுவ |
| எர்த்தா பாஸ்கா ரெஉலியட் | — ஹெட்டி |
| லிடா ஜிபியர் | — பொலிவியா |
| இஸபெல்லா பேரஸ் | — அர்ஜன்ரீனா |

### பிரதம மந்திரிகள்

| | |
|---|---|
| மாகிறட் தட்சர் | — இங்கிலாந்து |
| மரியா லிபிரியா பீற்ராஸ் | — நெதர்லாந்து |
| ஈஜிஸா சாள்ஸ் | — டொமினிக்கா |
| குறோ ஹாலிம் புறூஸ்டியாஸ்ட் | — நோர்வே |
| இந்திரா காந்தி | — இந்தியா |
| சிறிமாவோ பண்டாரநாயக்கா | — சிறிலங்கா |
| கோல்டா மேயர் | — இஸ்ரேல் |
| மரியா டி யோட்ஸ் | ... |
| பிஸ்ராகில்கோ | போர்த்துக்கல் |
| பெனசிர் பூட்டோ | ... பாக்கிஸ்தான் |
| ஹலிதா பேகம் ஷியா | ... பங்களதேஷ் |
| தன்சுவில்லர் | ... துருக்கி |



வடமராட்சிக்

கம்பன் கழகத்தினர்

நடத்தும்

# கம்பன் விழா

இடம்:

தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய முன்றில், நெல்லியடி.

காலம்:

1994 - 03 - 04, 05, 06 வெள்ளி, சனி, ஞாயிறு காலை, மாலை

**வெள்ளி மாலை**

மங்கள இசை

திரு. K. R. சுந்தரமூர்த்தி குழுவினர் திரு T உதயசங்கர் R கேதீஸ்வரன் குழுவினர்

**பட்டி மண்டபம்**

பொருள்

"கூர்த்த நுண்ணறிவு மிக்க பாத்திரம்"

அநுமனே! தாரையே! வீடணனே!

நடுவர்: இ. ஜெயராஜ்

**சனி காலை -**

மங்கள இசை

திரு. சிவரத்தினம் குழுவினர்

**சுழலும் சொற்போர்**

பொருள்

"கற்றோர் மனதைப் பெரிதும் களிப்புறச் செய்யும் படலம் எது?"

நடுவர்: இ. ஜெயராஜ்

**சனி மாலை**

மங்கள இசை

இசைப்பேரறிஞர் திரு. M பஞ்சாபிகேசன்

திரு. P நாகேந்திரம் குழுவினர்

**விவாத அரங்கு**

பொருள்

"கம்பனும் தவறிழைத்தான்"

நடுவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ்

"படைத்தவனைச் சந்திக்கும் பாத்திரங்கள்"

அறிமுகம்: கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

**ஞாயிறு காலை -**

மங்கள இசை

திரு. S ஜெகநாதன் குழுவினர்

**ஐயம் தெளி அரங்கு**

தலைவர்: பேராசான், இலக்கணவித்தகர் இ நமசிவாயதேசிகர்

**ஞாயிறு மாலை -**

மங்கள இசை

திரு N R K இரத்தினகுமார்

திரு N R K வாகீஸ்வரன் குழுவினர்

**கவியரங்கம்**

பொருள்

"கம்பனின் தலைமையில் கவிஞர்கள் கூடி எங்களின் நிலைமையை எடுத்தியம்புகிறார்"

தலைவர்: கவிஞர் இ. முருகையன்

**வழக்காடுமன்றம்**

பொருள்

"குற்றக் கூண்டில் தசரதன்"

நீதிபதி: பேராசான், இலக்கணவித்தகர் இ. நமசிவாயதேசிகர்

**கலந்துகொள்வோர்:**

துணைவேந்தர் அ. துரைராசா, திரு. க. சிவராமலிங்கம் B. A., திரு. க. சொக்கலிங்கம் M. A., திரு. அ. சண்முகதாஸ் Ph. D., திரு. காரை சுந்தரம்பிள்ளை Ph. D., திரு. சே. பத்மநாதன் B. A., திரு. நா. சுப்பிரமணிய ஐயர் Ph. D., திரு. ப. கோபாலகிருஷ்ணன் Ph. D., திரு. கா. சோமசுந்தரம் S. L. E. A. S, கவிஞர் மன்னவன் கந்தப்பு, கலாவிநோதன் சின்னமணி, வைத்தியகலாநிதி முருகானந்தம், திரு. சுந்தரம் டிவகலாலா, திரு. க. நாகேஸ்வரன் M. A., திரு. எஸ். ஸ்ரீதயாளன் B. A., கவிஞர் வே. குமாரசுவாமி, கவிஞர் நாவண்ணன், திரு. வை. நாகராசன், திரு. கி. நடராசா M. A., திரு. கோ. கி. வேலாயுதம், வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. செல்வம், திரு. தி. திருநந்தகுமார், திரு. க. குமாரதாசன், திரு. இரா. செல்வவடிவேல், திரு. த. சிவகுமாரன், திரு. ஜெ. கி. ஜெயசீலன், திரு. ஆறு. திருமுருகன் B. A., திரு த. சிவசங்கர், திரு. க. யோகநாதன், திரு. ஸ்ரீ. பிரசாந்தன், திரு ச மணிமாறன், திரு. த நாகேஸ்வரன், செல்வி அருந்ததி, செல்வி சாந்தினி, செல்வி குமுதினி, திரு. ச. முகுந்தன், திரு. கதிர்காமசேகரன், திரு. தேவதாசன், திரு. சி. சிற்றம்பலம், திரு. செல்லமுத்து ஸ்ரீநிவாசன், திரு. ஆ. சிவநாதன், திரு. ஸ்ரீதரன், திரு. த. ஜெயசீலன், சங்கீதபூஷணம் செல்வி நாகம்மா கதிர்காமர், சங்கீத பூஷணம் S. குமாரசாமி, திரு. வர்ண. இராமேஸ்வரன், செல்வி பரமேஸ்வரி கணேசன், வைத்திய கலாநிதி ஸ்ரீரஞ்சனகுமார்

'கம்பனுக்குத் தொண்டு கடவுளுக்குச் சேவை'

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

| | | |
|---|---|---|
| திரு. தி. சோமாஸ்கந்தராசா | திரு. ப. தயாபரன் | திரு மன்னவன் கந்தப்பு |
| செயலர் | அமைப்பாளர் | தலைவர் |

(கி-8751)

# பழசும் புதிசும்

தமிழர்களின் வீரத்திற்கு எடுத்துக்காட்டுகளாகவும் தமிழ் மக்களிடையே நிலவிய வீரமரபுகளுக்கான அசைக்க முடியாத இலக்கியச் சான்றாகவும்- புறநானூறு என்னும் சங்க கால நூல் விளங்குகின்றது. பண்டைய தமிழ் மக்களின் வீர சாகசங்களை இன்றைய சம்பவங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் முயற்சியாக இது அமைகின்றது. வெவ்வேறு புலவர் பெருமக்களால் வெவ்வேறு சம்பவங்கள் தொடர்பாக பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பான புறநானூற்றிலிருந்து சில காட்சிகளைப் பார்க்கலாம்

எதிரிகள் வீட்டிற்கு வந்து எங்கே உனது மகன் என்று கேட்டு ஒரு தாயை மிரட்டுகின்றனர். என்னுடைய சிறிய வீட்டின் கண்ணே நின்று உள்ள ஒரு தூணைப் பிடித்து நின்று உன்னுடைய மகன் எங்கே என்று கேட்டு மிரட்டும் எதிரிப் படையினனே! என விளித்து அப்பெண் பதிலளிக்கும் வகையை புறநானூற்றின் 86ஆவது பாடல் காட்டுகின்றது. சோழன் குல அரசனான போர்வைக் கோப்பெருநற்கிள்ளியின் செவிலித் தாயாரான இப் பெண்மணியின் பதில் தமிழர்களின் வீரத்தை எடுத்துக் காட்டும் ஒரு உதாரணம் ஆகும். "எனது மகன் எங்கே நிற்கிறானோ எனக்குத் தெரியாது ஆனால் புலியானது கலைப்புத்திர உறங்கிவிட்டு வெளியேறிய மலையின் குகைபோல அவனைப் பெற்ற வயிறு இதுதான். அவன் போர்க்களத்திலேதான் நிற்பான்: அவனை அங்கே போய் காண்" என்பது அவள் பதிலாக அமைந்தது. அப்பாடல் வருமாறு:

"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ என வினவுதி என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேனோரும்
புலிசேர்ந்து போகிய கல் அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே".

எதிரிப் படையினரின் இத்தகைய தொந்தரவுகளுக்கு ஆளாகும் நிலைமை இன்றும் தென் தமிழீழத்தின் கிராமங்கள் சிலவற்றில் சாத்தியமாகும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது பின்வருமாறு கூறத் தோன்றுகின்றது:

"எங்கே எங்கே புலிமகன் என்று
இங்கே வந்து ஏன் உலைக்கிறாய் எம்மை?
பாலுக்குள் சுவையை பகுத்துணரவும்
மலருக்குள் மணத்தை வகைப்படுத்தவும்
வல்லமை உண்டெனின் உனக்கு
புலிகளை நீயும் புரிந்திடக் கூடும்
அஃதின்றேல்
வீசும் காற்றின் விரைவுடன் ஒரு நாளுன்
பாசறை நோக்கிப் பாய்வான் அதுவரை
பேச்சின்றிக் காத்திரு பேர".

## ஆயுதம்

பார்த்துக் கொண்டான். முகாமிலிருந்து அவன் செலுத்தும் கவண்கல்பாண்டி கடையையும் தாண்டிப்போவதுண்டு. கூப்பிடு தூரத்திற்கப்பால்.

இந்தத் தூரம் கூப்பிடு தூரத்திற்குள்ளேதான்.

நெற்றிப் பொட்டுக்கு இலக்கு வைத்தால் எதுவும் தப்பாதாம்.

நான் நினைக்கிற மாதிரியெண்டால் நெற்றிப் பொட்டுக்குத்தான் இலக்கு வைக்க வேணும். நான் தாவீது.

பொறு பொறு... ஆறுதலாயிரு. எதையும் சாதிக்கிறதுக்கு வேகமும் வேணும் பொறுமையும் வேணும்! எண்டு அப்பா சொல்லுறவர்.

அவன் பொறுமை காத்தான். இலக்குப் பார்த்தான். கவணின் தடி இடக்கையிலும் கல்லோடிணைந்த வார் வலக்கையிலுமாக தயார் நிலையில் நின்றான்.

குறி தப்பினால்...?

அது அடுத்த கட்டநடவடிக்கை இப்ப விழுத்துறதப் பற்றி மட்டும் யோசி...

ஆனையிறவுக்கோ, மன்னாருக்கோ ஓட நினைத்த சிப்பாய், வழிதவறி கையில் துவக்குடன் பற்றைக்குள் கிடந்தான். எழுந்து உன்னி மரத் தோப்புக்குள் ஓட நினைத்தான்.

பயம்.., களை..., பசிமயக்கம்..., காலில் காயம்...

'தெய்யனே, மங்கொஹொம ஹரி கமடயண்ட ஒன மேவளப்பா... மடஎப்பா...

ஓடுவதற்காக எழுந்தான்.

அருச்சுணனுக்கு அந்தப் பெரிய பச்சை மரத்தில் கிளியின் ஆரம்மட்டுமே கண்ணுக்குத் தெரிந்ததாம். வசீகரனுக்கு சிப்பாயின் நெற்றிப் பொட்டு மட்டுமே தெரிந்தது.

'சக்...'

கவணின் குறிதப்பவில்லை.

எகிறி விழுந்த சிப்பாய் எழலாம் என்ற தயக்கத்தில் வசீகரன் அவனை நோக்கி ஓடாது இடம் மாறினான். சுற்றி மறு பக்கமாய் வந்தான் தூரம் குறைய துவக்கு இருவருக்கும் இடையே மண்ணில் கிடந்தது.

உதை.எடுத்துப் போய்அண்ணையவையிட்டை குடுக்க வேணும்.

உவன் கள்ளமாய் கிடக்கிறானோ...?

பயந்தால் முடியாது. யார் முந்துறது பார்ப்பம்.

முயல் பாய்ச்சல். துவக்கைத் தூக்கிக் கொண்டு திரும்பி ஓடி அரசமரத்தடியில் மறைந்து நின்று விழுந்து கிடப்பவனைப் பார்க்கிறான். வசீகரன்.

விழுந்தவன் இன்னும் எழவில்லை

அவன் எழவே மாட்டான்.

(கற்பனையே)

## கடலுக்கு அடியில் மலைகள்

கடலுக்கு அடியில் நிறைய மலைகள் இருக்கின்றன. ஒரு கிலோ மீற்றர் உயர மலைகள் ஏராளம் உள்ளன மிக உயரமான மலையின் உச்சி கூட ஒரு மைல் ஆழத்தில் தான் இருக்கிறது ஆகவே 'கப்பல் போகும்போது தடுக்காதா?' என்று பயப்பட வேண்டாம்

பூமியிலேயே நீளமான மலைத்தொடரும் கடலுக்கு அடியில்தான் இருக்கிறது அட்லாண்டிக் கடலுக்கு அடியில் - Mid - Atlantic Ridge என்று அழைக்கப்படும் இந்தத் தொடரின் மொத்த நீளம் 10,000 மைல்

# ஜனாதிபதியின் பேரினவாத பேச்சிற்கு பிரதமர் தேடும் புதிய விளக்கங்கள்

சிறிலங்காவின் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா வீரகேசரி வாரப் பத்திரிகைக்கு அளித்துள்ள நீண்டதொரு பேட்டியில் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் பேரினவாத அறிவிப்புகளுக்கு புதிய விளக்கங்களும் அர்த்தங்களும் கற்பிக்கும் ஒரு பணியில் ஈடுபட்டுள்ளார்.

இம் முயற்சியின் பிரதான நோக்கம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் பேச்சுகள் சிறுபான்மை இன மக்கள் மத்தியில் பிழையான ரீதியில் விளங்கிக் கொள்ளப் படுவதாக காட்ட முற்படுவதாகவுள்ளது. இதற்காக இப் பேட்டியில், ''ஜனாதிபதியின் பேச்சுக்கள் தவறான அர்த்தத்தில் நோககப்பட்டவை'' என பலதடவை பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா வற்புறுத்த வேண்டி வந்துள்ளது.

இதேவேளை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பேச்சாற்றல் பற்றியும் விமர்சிக்கவேண்டியும்ஏற்பட்டுள்ளது. ''ஜனாதிபதி விஜேதுங்கா ஜனாதிபதி பிரேமதாசா போல் பிரபல பேச்சாளர் அல்ல அவர் சிறு சிறு கூட்டங்களிலேயே பேசி வருகின்றார். அவர் சிங்கள மக்கள் மத்தியில் பேசுவதை சிறுபான்மையினரை ஒடுக்குவதாகத் திரித்துக்கூறப் படுகின்றது'' என ரணில் விக்கிரமசிங்காதெரிவித்திருக்கின்றார்.

ஆனால், டி. பி. விஜேதுங்காவைப் பற்றி அறிந்தவர்கள் அவர் ஓர் ஆழமற்ற அரசியல்வாதி என்றோ அன்றி செயற்பாடுஅற்றவர்என்றோ கொள்ள முடியாது என்கின்றனர். இந்நிலையில் டி. பி. விஜேதுங்காவின்பேச்சுக்களை ஆழமற்றவை, பேச்சு வன்மையற்ற ஒருவரின் பேச்சு என்றோ புறந்தள்ளி விட்டு விட முடியாது. அத்தோடு, நாட்டின் ஜனாதிபதியும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற ரீதியிலும் அவரின் பேச்சிற்கு தவறான காரணம் கற்பிககப் பட்டு விட்டதாக புதிய காரணங்கள் கற்பிக்க முற்படுவதும் தவறானதாகவே இருக்கும்.

ஆனால், பிரதமர் ரணில் இம்முயற்சியில்ஒரு பெரும் சிரத்தையுடன் ஈடுபட்டிருக்கின்றார்அவர் டி.பி.விஜேதுங்கா ''சிறுபான்மையினர் வாக்குகளில் நீண்ட காலத்திற்குத் தங்கியிருக்கப்போவதில்லை'' என்று வற்புறுத்தி வரும் கருத்திற்கு இது ''சிறுபான்மையினரைத் தனிமைப்படுத்தும் நோக்குடன் ஆனதல்ல; இனப்பிரச்சினைக்கு அடிப்படையிலான ஒற்றுமை காண்பதன் மூலம் சமாதானம் காண வேண்டும் என்ற நோக்கிலேயே ஆகும்'' என கொடுத்துள்ள விளக்கமானது எந்தளவிற்கும்ஏற்புடையதோ அன்றி ஒப்புக் கொள்ளக் கூடியதோ அல்ல;

இதில், திரு. ரணில்கூறுவது போன்று ஒற்றுமை காண்பதன் மூலம் பிரச்சினையை தீர்த்து வைக்கும் நோக்கம் கொண்டது எனில், அது சகல இனத்தினதும் ஒற்றுமைபற்றியதான அறிவிப்பாக இருக்க முடியுமே ஒழிய ஒரு போதும் சிங்கள இனத்தின் ஒற்றுமை குறித்த பேச்சாக மட்டும் இருக்க முடியாது. மறுவளமாக டி. பி. விஜேதுங்கா இவ்விடயத்தை நேரடிப்பொருளிலேயே குறிப்பிட்டார் என்பதற்கு அவரது நடவடிக்கைகளே போதிய ஆதாரங்களாகவுள்ளன. சுமார் 17 வருடங்களுக்கு மேலாக ஐ. தே. கட்சியின் வெற்றிக்கு கணிசமானபங்காற்றிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை பிளவு படுத்தியதோடு அமைச்சர் தொண்டமானுடன் உறவை முறித்துக் கொள்ளத் தயாராக நடவடிக்கைளை மேற்கொண்டிருந்தவர் இந்தளவிற்கு டி. பி. யின் நடவடிக்கை சிறுபான்மையினரின் வாககுகளைப் புறக்கணிப்பதாக இருந்ததென்பதே உண்மை நிலையாகும்.

இதே போன்றே இந்த நாட்டை ஆளும் அதிகாரம் பெரும்பான்மை இன மக்களின் கைகளிலேயே இருகக வேண்டும்.'' என்ற ஜனாதிபதியின் அறிவிப்புமாகும். இதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா'கடந்தகாலங்களில் இந்த நாட்டில் பெரும்பான்மை மக்களின் தலைமைத்துவமே தொடர்ச்சியாக இருந்து வந்தது. இதன் கருத்து பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை ஆளுவதென்பதல்ல.ஜனாதிபதிதெரிவிக்கும் கருத்து சிங்கள மக்கள் ஒன்றுபடவேண்டும் என்பதே அல்லாமல், அவர்கள் சிறுபான்மையினர் மீதுமேலாதிக்கம் செலுத்த வேண்டும் என்பதல்ல'' எனக் கூறியுள்ள விளக்கத்தில் அவர் கடந்த கால, நிகழ் கால சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது செலுத்திய அதிகாரப் பிரயோகத்தைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

அதாவது இலங்கையின் அரசியல் இன்று இரத்தம் சிந்தும் அரசியலாக மாறிவிட்டமைக்கு பெரும்பான்மை இனத்திடம் ஆட்சி அதிகாரம் முழுமையாக ஒப்படைக்கப்

## ஜெயராஜ்

பட்டதே காரணமாகும்.இந் நிலையில் பௌத்த சிங்களத் தலைவராகத்தம்மை வெளிப்படையாகவே காட்டிக் கொள்ள முற்படும் டி. பி. விஜேயதுங்கா பௌத்தசிங்களவரை ஒன்றுபடுமாறுகோருவது என்பதுஅதிகாரம்செலுத்தவும் அடக்கியாளவும் இல்லாமல் வேறு எதற்காக?சிறுபான்மையினரை அரவணைத்துப் போகும் உயர்ந்த ஜனநாயக பண்பைப்பேணவா? இவ்வாறான உயர்ந்த ஜனநாயகப் பண்பு சிறிலங்கா அரசியலில் எங்காவது கடந்த காலத்தில் காணப்பட்டதுண்டா?

இதேவேளை 'சிறுபான்மையினர் பெரும்பான்மையினைரச்சார்ந்தே இருக்க வேண்டும் எனவும்,பெரும்பான்மையினரின் பாதுகாப்பில்இருக்கவேண்டும் எனவும், நாட்டின் அரசியல் நிர்வாகத்தில் பங்குபற்ற அவர்களுக்கு உரிமை இல்லை என்ற டி. பி. விஜேயதுங்காவின் தெளிவான அறிவிப்பிற்கு விளக்கம்கூறிய பிரதமர், வழக்கம் போலவே தவறான அர்த்தம் கற்பிக்கப் பட்டுவிட்டதாகத் தொடங்கி நான்ஜனநாயகத்திலும்பேச்சு வார்த்தையிலும் நம்பிக்கையுள்ளவன் பேசுவதற்கு நாம் கொடுக்கும் சமிக்கைகள் சரியான முறையில் பயன்படுத்தும்போது பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை தோன்றும்'' எனக் குறிப்பிட்டு கேள்விக்கு அப்பாற்பட்ட விளக்கத்திற்கு அவர் சென்றுள்ளார்;

அதாவது ஜனாதிபதி குறித்த கேள்விக்குப்பதில் அளிக்க முற்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இறுதியில் இக் கேள்விக்கு தன்னிலை விளக்கம் ஒன்றையே அளிக்கமுடிந்துள்ளது. ஜனாதிபதியின் நிலைப்பாட்டிற்கு தன்னால் ஆன விளக்கம் ஒன்றைக்கூட ரணில் விக்கிரமசிங்காவால் அளிக்க முடியவில்லை.

இதேவேளை பேச்சுவார்த்தைக்கு கொடுக்கும் சமிக்கைகள் பற்றி ரணில் பேசியுள்ளார் எனினும், சமாதானத்திற்கும், பேச்சுவாாத்தைக்கும் அரசு கொடுத்த சமிக்கைகள் என்ன என்பதை அவர் கூற முடியவில்லை. ஆனால் சமாதானம் பேச்சுவார்த்தை என்பன குறித்து ரணிலின் பேச்சுக்கள் சமிக்கைகளாகவோ அன்றி நல்லெண்ண சூழ்நிலை உருவாக்குவதாகவோ இல்லை மாறாக நிபந்தனை விதிப்பவையாகவே இருந்து வந்துள்ளன,

ஆனால் இவை யாவற்றிற்கும் மேலாக டி.பி விஜேயதுங்காவின் ''தெற்கிலிருந்து விநியோகங்கள் மேற்கொள்ளப் படாவிட்டால் வடபகுதி மக்கள் மண்ணைத்தான் தின்ன வேண்டிவரும் என்ற அறிவிப்பிற்கு பிரதமர் ரணிலினால் நேரடியான பதில் எதையும் முன்வைக்கவோ அன்றி அறிவிப்பிற்குப் புதிய கற்பிதங்களோ செய்யமுடியவில்லை என்றே கூற முடியும். வட பகுதிக்கு அரசு அனுப்பும் பொருட்களுக்கு இருந்ததடைகள் தளர்த்தப்பட்டுள்ளதை குறிப்பிட்டுவிட்டு ஜனாதிபதியின் கருத்து தவறாக விளங்கப்பட்டுவிட்டதாகவே கருத இடமுண்டு எனக் கூறி முடித்து விடுகின்றார்.

இவ்வாறாகபிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜன திபதி பௌத்த - சிங்கள பேரினவாத சிந்தனையை மூடி மறைத்து ''அவை பிழையாக அர்த்தம் கொள்ளப்பட்டு விட்டன'' என்ற ரீதியில் அதற்கு அரசியல் விளக்கம் கொடுக்க முயற்சித்து தோல்விகண்டு போயுள்ளார் என்பதே உண்மையாகும்.

டி. பி. விஜேதுங்கா தனது இனவாதச் சிந்தனையை தனது அறிவிப்புக்களில் மட்டுமல்லநடவடிக்கைகளிலுமே தெளிவாக முன்வைத்துள்ளதோடு நடைமுறையிலே தெளிவாகவே உள்ளார். இது ஒரு சிங்கள அரசு பௌத்தநாடு' என்பதே டி பி விஜேதுங்காவின் நிலைப்பாடு ஆகும் இந்நிலையில் அவரின் கொள்கைக்கு புதிய விளக்கம் கொடுக்க முற்படுபவர்கள் தவிர்க்க முடியாததோல்வியே அடைய வேண்டி வரும்

ஆனால் இதனை வெளிப்படுத்தும் டி, பி, விஜேதுங்காவின் பகிரங்க அறிவிப்புகளின் இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் முகத்திரையைக் கிழித்து, பாதகமான ஒரு சூழலை உருவாக்கிவிடும்என்ற நிலையிலேயே பிரதமர்ரணில் ஜனாதிபதியின் உரைக்கு விளக்கவுரை வழங்க முற்படுகின்றார்.

இவ்விளக்கவுரையில் சில இடங்களில் ஜனாதிபதி டி,பி. விஜேதுங்காவை அவர் சிறுமைப்படுத்தியதாகவும் அமைந்துவிடுவதுதான் இதில்உள்ள அவலம் ஆகும். இதில் சுட்டிக் காட்டக் கூடியதாக உள்ளது என்னவெனில் சகல இனங்களின் தலைவராக ஜனாதிபதியை சித்திரிக்க முற்படும் ரணில் விக்கிரமசிங்கா மறுவளமாக சிங்கள கிராமங்களில் நடைபெறும் சிறு சிறு கூட்டங்களில் பேசும் ஆற்றல் மட்டுமே ஜனாதிபதியிடம் உள்ளது எனக் கூறியதாகும்.

ஆனால் இப்பேட்டி மூலம் பிரதமர் ரணில் தனது பார்வையில் டி. பி, விஜேதுங்கா பற்றி தனது கணிப்பீட்டை வெளிப்படுத்தியுள்ளார். அதாவது, தனது கொள்கையை தெளிவாகமக்கள்முன் வைக்க முடியாத ஒரு தலைவரை ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்காவும் கொண்டுள்ளது என்பதுவே அதுவாகும்; இதனைரணில் தெரிந்து செய்தாரா? தெரியாமல் செய்தாரா என்பதேதற்போதுள்ள புதிய கேள்வி;

## சேமிப்பை திரட்ட

கட்டுப்பாடுகளை இங்குள்ள வங்கிகள் அமுல்படுத்துவதாகவே அமைகின்றன தலைமையலுவலகத்திற்கு ஒரு நல்ல சேவகனாக செயற்படமட்டுமேவங்கிகள் தயாராக இருக்கின்றன.

கப்பலில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்பாதுவிட்டால் உலக நாடுகளின் சர்ச்சை கிளம்பும், பல மனிதநேய நாடுகள் கண்டிக்கும் என்பதற்காகவே சிறிலங்கா அரச உணவுப்பொருட்களை அனுப்புகின்றது. இதனை மக்கள் பயன்படுத்த முடியாத அளவு ஒரு மறைமுகமான தடையை வங்கியூடாக போடப்பட்டதே குறிப்பிட்ட தொகை பணத்திற்கு மேல் வைப்புக்களை ஏற்று பணத்தை வைத்துக்கொள்ள வேண்டாம் என்ற கட்டளை. அரசால் அனுப்பும் பொருட்களை கூட்டுறவுச் சங்கங்கள் காசோலை அல்லது ''ராவ்ட்'' மூலம் தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யவேண்டும். அப்போது வங்கிகள் தமது குறிப்பிட்ட தொகைக்கு மேல் பணத்தை ஏற்காவிட்டால் அப் பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத ஓர் சூழ்நிலை ஏற்படக் கூடும். இந்த நிலையில் எமது சந்தைகளில் பொருள் தட்டுப்பாடாக இருக்கபண்டகசாலையில் பொருள் ...ப தேங்கி இருக்கும்நிலைஉருவாகலாம். எனவே சமூக நலனை கருத்தில் கொண்டு வங்கிகள் இக்கால கட்டத்தில் உதவி செய்ய முன்வர வேண்டும்.

தென்னிலங்கையிலுள்ள தலைமை அலுவலகங்களும் இங்குள்ள வங்கிகளை தொடர்ந்தும் மாற்றான் தாய் மனப்பான்மையோடுதான் அணுகின்றன. அண்மையில்கூட சில திட்டங்கள்மூலம் எமது மக்களிடமிருந்து பெருமளவு சேமிப்பை திரட்டிய வங்கிகள் அவற்றிற்கான சீட்டிழுப்புக்களைக் கூட எமது மண்ணில் நடத்துவதற்கு தயாராக இல்லை. ஆகக்கூடிய தொகையை எமது மக்கள் வைப்பில் இட்டபோதும் கூட எமது மக்களை நம்பிச் செயற்பட வங்கிகள் தயாராக இல்லை என்பதையே இச்செய்கை எடுத்துக் காட்டுகின்றது.

வங்கிகளில் அடகு வைத்த நகைகளை மீளப்பெறுவதற்கு நாம் பணத்தை கட்டிவிட்டு பல வருடகாலம் காத்திருக்கவேண்டியிருந்தது என்பதுடன் பல ஆயிரக்கணக்கான ரூபாக்களை செலவிட்டு கொழும்பு வரை செல்ல வேண்டியும் ஏற்பட்டுள்ளது; நாம் அடகு வைத்த வங்கிகிளையிலே நகைகளை மீளவும் அளிக்க வேண் கடமைப் பொறுப்பைக்கூட வங்கிகள் நிறைவேற்றவில்லை இன்று இங்கு நாம் மிகுந்த பாதுகாப்பான சூழ் நிலையில் வாழ்கின்றோம் என்ற உண்மையைதெட்டத்தெளிவாக கூறுவதன் மூலம் வங்கிகள் இத்தகைய நடவடிக்கைகளை அதாவது நகைகளை இங்கு கொண்டு வந்து வழங்கும் வேலையை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

மேலும் வங்கிக்கொள்ளைகளில் பறிபோன வாடிக்கையாளர்கள் பாதுகாப்புக்காகவைத்த நகைகள் மற்றும் சொத்துகளுக்கான நட்டஈடுகூட இன்னும்வழங்கப்படவில்லை வங்கிகளை நம்பிச்செயற்பட்ட எமது மக்களின் எதிர்பார்ப்பு பூர்த்தியாக்கப்படவில்லை சிறிலங்கா அரசாங்கத்தினது முழுமைபாதுகாப்பு வழங்கப்பட்டதும் சிறிலங்கா பாதுகாப்பு படைகளினதும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தபோது இடம்பெற்ற சம்பவங்களினால் ஏற்பட்ட பாதிப்புக்குள்ளான நட்ட ஈடுகள் சிறிலங்கா அரசாங்கமே வழங்க வேண்டும் என்பதை வற்புறுத்தி எமது மக்களுக்கான நட்ட ஈடுகள் கிடைக்கச் செய்ய வங்கிகள் முன்வர வேண்டும்.

### மக்கள் நலனை கவனிக்க தயக்கம்

மக்களின் நலனைச்செயற்படுத்த தயங்கும் வங்கிகள் தமக்குப் பொருளாதார தடையும் முட்டுக்கட்டையும் போடுவதாகவே மக்கள் கருத வேண்டியிருக்கும். எமது பொருளாதாரம் நெருக்கடியில் இருந்து விடுபட்டு சிறப்பாக அமைய வேண்டுமாயின் எமது பிராந்திய வங்கிகள் எமக்காக செயல்பட வேண்டும், இல்லாவிட்டால் வெறும் வங்கிக் கட்டிடங்களை மட்டும் வைத்துக் கொண்டிருப்பதால் எமது மக்களுக்குப்பயனேதும் கிட்டப்போவதில்லை.

இதேவேளை இன்று இங்கு செயற்படும் வங்கிகளும் பலவித பிரச்சினைகளை எதிர்நோக்குவது உண்மையே- பல அடிப்படைவசதியில்லை; தொடர்பு வசதிகள் மிக மிகக்குறைவு. ஊழியர் பற்றாக்குறை, காகிதாதி மற்றும் அலுவலக உபகரணங்கள் போன்ற பலவித கஷ்டங்களை எதிர் நோக்குகின்றன. எனினும் அதற்காக தொடர்ந்தும் சமுதாய நலனை வங்கிகள் புறக்கணிப்பதையோ அல்லது சமூகத்தை ஏமாற்றுவதையோ அனுமதிக்கப்படக் கூடாது. இனியும் சமூக நலன்கள், வளங்கள் சுரண்டப்படுவதை வங்கிகள் நிறுத்தவேண்டும். எமது மக்களினதும், சமூகத்தினதும் குறைகளை வங்கிகள் தமது தலைமை அலுவலகங்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். தலைமை அலுவலகங்களின் நலனையும், தமது நலனையும் பேணுவதை மட்டும் குறியாகக்கொண்டு இங்குள்ள வங்கிகள் செயலாற்றக் கூடாது.

# தமிழ் நாட்டில் பதவி இழக்க இருப்பது யார்? ஆளுநர் ரெட்டியா? முதல்வர் ஜெயலலிதாவா?

தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி ஓர் ஆந்திர அரசியல்வாதி. மாநில முதல்வராக, மத்திய அமைச்சராக பல மாநிலங்களில் ஆளுநராக இருந்தவர். இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் மாநிலத்தைச் சேர்ந்தவர். மாநில அரசியலில் ராவுக்கு எதிரானவர்களுடன்,இணைந்துசெயற்பட்டவர். இதனால் நரசிம்மராவுக்குப் பெருந்தலைவலியைக் கொடுத்து வந்தவர். ஆனால் இவரை இப்படியே விட்டால் ஆந்திர அரசியலில் காங்கிரஸ் கட்சிக்குள் தனக்கெதிரான பெரும் சக்தியாகி விடுவார் என்ற அச்சத்தில், இவரைக் கட்சியிலிருந்து நீக்காத ராவ் தமிழ்நாட்டின் ஆளுநராக நியமித்துவிட்டார்

தமிழ்நாட்டில் அதிமுகவின் செயற்பாடுகளையும் அ.திமுக அரசின் செயற்பாடுகளையும் கண்காணிக்க ஆளுநராக அனுப்பிவைக்கப்பட்டவர் பீஷ்மன் நாராயண் சிங். அவர் தனது 'கடமையில்' நின்றும் தவறியதுடன் அதிமுகவுடன் அதிகமாக இழைந்தது தமிழ்நாடு காங்கிரசுக்குப் பிடிக்கவில்லை. அதுவும் அதிமுக - காங்கிரஸ் உறவு முறிவடைந்ததும் ஆளுநர் பதவியில் பீஷ்மன் நாராயண்சிங்கை தொடர்ந்து வைத்திருக்க காங்கிரஸ் தலைமைப்பீடம் கூட விரும்பவில்லை.

காங்கிரஸ்-அதிமுக கூட்டு முறிந்ததும் ஆட்சிக் கலைப்பு நடைபெறுமா என்ற சந்தேகம் ஏற்பட்ட நிலையில் தமிழக ஆளுநராக ஜெயலலிதா அரசுக்கு கூற்றுவனாவாரோ என்ற நிலையில் நியமிக்கப்பட்டவர் சென்னா ரெட்டி. எனவே இந்நிலையில் அதிமுகவினருக்குச் சென்னாரெட்டி வேம்பாகக் கசந்ததில் ஆசசரியம் எதுவும் இல்லை. ஆனால் அதிமுகவின் ஆட்சியைக் கலைப்பதற்குக் காங்கிரஸ் தயங்கும் இவ்வேளையிலும் கூட ஜெயலலிதா-சென்னாரெட்டி தகராறு தமிழ்நாட்டு அரசியலில் பெரும் இறுக்கமாக சிலநேரங்களில் சிறுபிள்ளைகள் சண்டைபோலகூட தொடர்கின்ற சங்கதி

இங்கு இவர்கள் இருவரும் ஒருவர் மீது மற்றவர் தமது கோபத்தைக் காட்டிக்கொள்ளும் விதம் சிறுபிள்ளைகள் செயற்படுவதிலும் சிறுமையாக இருக்கின்றது.

நியமனத்தின் போதே மோதல் என்ற நிலையில் இந்நெருக்கடி மேலும் மேலும் விரிவடைந்து சென்றுகொண்டிருக்கிறது. மாநில ஆளுநர் மாநில அரசினால் புறக்கணிக்கப்படுவது அன்றாட நிகழ்வு என்ற நிலையிலிருந்து அவரைத் தாக்கிப் பேசுவது என்ற நிலைக்கு இது வளர்ந்து செல்கிறது.

அரசியலமைப்பு ரீதியாக மாநில ஆட்சியின் தலைவராகிய ஆளுநரை முதல்வர் சந்திக்காமை, சட்டப்பேரவையின் மரபுகளை மீறி ஆளுநரை உரையாற்ற விடாது தடுத்தமை, குடியரசு தின விழாவில் கொடியேற்ற வந்த ஆளுநரை முதல்வர் ஏறெடுத்தும் பார்க்காமை என்பன வெளியே தெரிகின்ற புறக்கணிப்புக்கள்.

இதேவேளை அரசாங்க விழாக்களுக்கு ஆளுநரை அழைக்காமல் 'புறக்கணித்தல், ஆளுநர் கலந்துகொள்ளும் விழாக்களில் அமைச்சர்கள் கலந்து கொள்ளாமை போன்றன நாளாந்தம் நடககும் புறக்கணிப்புக்களாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் ''மாநில ஆளுநர் சென்னா ரெட்டியை புறக்கணிப்பது எப்படி?'' என்பதை ஆராய்வது தமிழக மந்திரிசபை நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடம் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது

மேலும் தமிழ்நாடு அரசு வெளியிட்ட நாட்குறிப்பு ஒன்றில் ஆளுநரின் படம் கிழித்தெறியப்பட்ட விவகாரம் சூடு பிடித்துள்ளது. ஆளுநரின் படத்துடன் அச்சிடப்பட்ட நாட்குறிப்பு, அதன் பின்னர் படம் கிழித்து வீசப்பட்டபின் வெளியிடப்பட்ட நாட்குறிப்பு என இரண்டும் மத்திய அரசு அதிகாரிகளுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவற்றை அவதானித்த மத்திய அரசின் உயரதிகாரி ஒருவர் "இது ஜெயலலிதாவின் அற்பத்தனமான செய்கை'' என வர்ணித்துள்ளார்.

இதற்கிடையில் தமிழ்நாடு அரசாங்கத்தின் சட்டமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட்ட நாட்குறிப்பில்கூட சம்பிரதாயபூர்வமாக ஆளுநர் சென்னா ரெட்டியின் படம் வெளியிடப்படவில்லை, 30 பளபளக்கும் படங்களைக் கொண்ட இந்த நாட்குறிப்பில் முதல்வர் ஜெயலலிதாவின் சாதனைகள் வெளிவந்துள்ளன, காவிரி நீர் பிரச்சினைக்காக சென்ற ஆண்டு ஜெயலலிதா உண்ணாவிரதம் இருந்தபோது சென்னா ரெட்டி உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம் இந்த நாட்குறிப்பில் இல்லை ஆனால் முன்னாள் ஆளுநர் பீஷ்மநாராயண்சிங்கின் படம் வெளிவந்துள்ளமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்,

எல்லாவற்றுக்கும் மேலாக ஆளுநரைப்பற்றி தமிழக அமைச்சர்கள் மேடையில் தெரிவித்துவரும் கருத்துககள் முதல்வர் ஆளுநர்-மோதலின் உச்சக்கட்டம் என்று சொல்லப்படுகிறது, இவ்வாறு அவர்களைப் பேசுமாறு ஜெயலலிதாவே உசுப்பி விட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இங்கு அமைச்சர் ஆர். எம். வீரப்பனிடம் ஜெயலலிதா ''கடந்த காலத்தில் என்னை எதிர்த்தபோது எவ்வாறெல்லாம் கடுமையாகப் பேசினீர்கள் இப்போது ஆளுநரைக் கண்டித்துப்பேச உங்களுக்கு மனமில்லையா? அல்லது துணிவில்லையா?'' என்று கேட்டாராம் இதனையடுத்து வீரப்பன் ஆளுநரை வீராவேசமாக தாக்கி வருவதாகக் கூறப்படுகிறது இதே வேளை தமிழக அமைச்சர் நெடுஞ்செழியன் ஆளுநரை கடுமையாகவிமர்சித்து பேசிய விடயம் இந்தியப்புலனாய்வுத் துறையினரால் விசாரிக்கப்பட்டு வருகிறது

இவ்வேளையில் மத்திய அரசின் அனுமதி கிட்டாமையால் புழுங்கிக்கொண்டிருந்த ஆளுநரின் அண்மைக்கால அறிக்கைகள் மத்திய அரசு ஆளுநருக்கு, ஜெயலிதாவுக்குப் பதிலடிகொடுக்கப் பச்சைக் கொடி காட்டிவிட்டதாகவே கொள்ளப்படுகிறது எவ்வளவு மக்கள் செல்வாக்கு மிகுந்த முதல்வராக இருந்தாலும் மரபுகளை மீறி நடப்பதை அனுமதிக்க முடியாது என மத்திய அரசுஅறிக்கை வெளியிட்டுள்ளது. ஜெயலலிதாவை பகைத்துக் கொள்ள விரும்பாத அதே வேளையில் சென்னா ரெட்டியை பகைத்துக் கொண்டால் ஆந்திராவில் தன் தலைக்கு ஆபத்து என்பதை புரிந்துகொண்ட ராவின் நடவடிக்கையே இது என கூறப்படுகிறது மத்திய ஆசின், இவ் அறிவிப்பிற்குப் பின் முதல்வரின் இந் நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்கும் விளகக அறிக்கைகளை ஆளுநர் மாளிகை வெளியிட்டு வருகின்றது.

இதேவேளை ஜெயலலிதாவை மிரட்டும் நடவடிககைகளை மத்திய அரசு ஆரம்பித்து விட்டதை அதன் தற்போதைய நடவடிக்கைகள் காட்டுகின்றன.

தொகுப்பு:
**சி. சிவபாலன்**

மத்திய புலனாய்வுத் துறை மட்டுமன்றி மத்திய அரசின் நிதியமைச்சகத்தைச் சேர்ந்த நான்கு குழுக்கள் தமிழகம் சென்று அ.தி.மு.கவின் ஊழல்கள் குறித்து விபரங்களைச் சேகரித்து வருகின்றன. சென்னை தஞ்சை மாவட்டங்களில் நில விற்பனை, முந்திரிகை தோப்புக்கள் கொள்வனவு, மருத்துவமனைகள், கல்யாண மண்டபங்கள் கட்டியமை போன்றவற்றில் ஈடுபட்டவர்களின் பெயர் விபரங்கள், யார் விற்றது யார், வாங்கியது சம்பந்தப்பட்ட தொகை, இவற்றை வாங்கியவர்களுக்கு பணம் எவ்வாறு கிடைத்தது என்ற விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

மேலும் அதிமுக தலைமைக் கட்டிட நிதிக்காக அமைச்சர்கள் போட்டிபோட்டுக் கொண்டு வழங்கிய லட்சக் கணக்கான பணம் எவ்வாறு இவர்களுக்குக் கிடைத்தது என்பதனை வருமானவரி அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்

இம்மோதல்விடயத்தில் இந்தியப்பிரதமரும்ஜனாதிபதியும் தலையிட்டு எடுத்த கடும்நடவடிக்கை காரணமாக கடந்த ஆண்டு தொடங்கிய தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத் தொடரை ஆளுநர் சென்னா ரெட்டி மார்ச் 15 ஆம் திகதி முடித்துவைக்க முதல்வர் ஜெயலலிதா சம்மதம் தெரிவித்தார்

''சட்டசபையில் வரவுசெலவுத் திட்டத்தை தாக்கல் செய்யவேண்டியவர் ஆளுநர் அத்துடன் சட்டசபைக் கூட்டத் தொடரை ஆளுநர் முடித்துவைக்காவிட்டால் தமிழக அரசு கொண்டுவர எண்ணியுள்ள சட்டங்களை நடைமுறைக்குஇடமுடியாதுமேலும் மத்திய அரசின் பிரதிநிதியாகிய ஆளுநரை அவமதிக்கும் செயலை மத்திய அரசு பார்த்துக்கொண்டிராது'' என எச்சரிக்கப்பட்டபின்னரேகூட்டத்தொடரை முடித்துவைக்க ஆளுநரை அனுமதிக்க ஜெயலலிதா சம்மதித்துள்ளார் என கூறப்படுகிறது.

இவ்வாறு அரசியலமைப்பு ரீதியாக ஜெயலலிதா மிரட்டலுக்கு பணிந்தாலும் அவர் தன்னளவில் விட்டுக்கொடுப்பவராக இல்லை. சென்னையில் நடந்து முடிந்த சர்வதேச விளையாட்டுப் போட்டிக்கு ஆளுநர் சம்பிரதாயத்திற்குக் கூட முறையாக அழைக்கப்படவில்லை. இவ்விழாமுழுவதையும் ஜெயலலிதாவே தலைமை தாங்கி நடத்திமுடித்துள்ளார்.

ஆனால் ஆளுநர் சென்னா ரெட்டியோ விட்டேனா பார் என்ற விதத்தில் பக்கம் பக்கமாக இவ்விளையாட்டுத் தொடர்பான விளம்பரங்களை வெளியிட்டவர்கள் யார்? அவர்களுக்கு அதற்கான பணபலம் உள்ளதா அவர்கள் வருமானவரி செலுத்துகின்றனரா? என்ற விபரங்களை சேகரித்து வருகிறார். மேலும் இப்போட்டிக்குதொழிலதிபர்கள் சிலர் போட்டி போட்டுக் கொண்டு செய்த செலவுகளையும் ஆளுநர் உன்னிப்பாக அவதானித்து வருகிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக ''இன்னும் சில தினங்களில் ஜெயலலிதா மீது நடவடிக்கை'' என்ற ஆளுநரின் அறிவிப்பு தமிழ்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்த 25ம் திகதி உச்ச நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு சட்ட விசாரணைக் குழு முன் ஜெயலலிதாவின் வழக்கு விசாரணைக்கு வருகிறது. அதன் தீர்ப்பு வந்ததும் அடுத்த நடவடிக்கை என்பதே ''சில தினங்கள்'' என்பதன் கருத்து என கூறப்படுகிறது. இதனையடுத்துச் சட்டமன்ற உறுப்பினராக

ஜெயலலிதா நீடிக்கும் தகுதியை இழப்பாரா அல்லது ஆட்சி கவிழ்க்கப்படுமா என்பது தெரியவரும்.

எவ்வாறாயினும் விடாக்கண்டன் கொடாக்கண்டனாக ஆளுநர் - ஜெயலலிதா மோதல் யாராவது ஒருவர் பதவியிழந்தாலேயே முடிவுக்கு வரும் போல தோன்றுகிறது ஏனெனில் இவ்விருவருமே மத்தியிலுள்ள ஆட்சியின் இராஜதந்திர அணுகுமுறைகளுக்கு இலகுவில் மசிந்துவிடக் கூடியவர்கள்அல்லஆனால்அதுவரை இப்பந்தடியில்அகப்பட்டுமுழிக்கப்போவது மக்களும் ஆளுநரால் அனுமதிவழங்கப்படாதுள்ள சட்டங்களும் அபிவிருத்தித் திட்டங்களும் தான்

## இலங்கையில்

கட்டுப்படுத்திக் கொண்டு எவ்வாறு எடுப்பது என்பதிலேயே நேரத்தை விரயம் செய்வது துர்ப்பாக்கிய நிலையாகும். 1977- 1978இல் 4000லிருந்து 5000 ஆகவும்,

1989|90இல் 8000க்குமேற்பட்டவர்களாக அதிகரிக்கப்பட்டது. கால அளவையும் க.பொ.த (உ|த) மாணவர்களது எண்ணிக்கை அதிகரிக்கும் பொருளாதார மாற்றமும் குடித்தொகை அதிகரிப்புடனும் பார்க்கும் போது இவ்வதிகரிப்பானது குறையென்றே கூறவேண்டும். மேலும் எல்லாத் துறைகளிலும் சரியான அதிகரிப்பு ஏற்பட்டது எனக்கூறுவதற்கில்லை. வளாகம் சரியான முறையில் பயன்படுத்தவுமில்லை. பழமையான கற்கைநெறிகளில் கூடுதலான ஆசிரியர்களும், குறைந்த மாணவர்கள் இருப்பதை காணும் ஒரு நிலையில் புதிய கற்கை நெறியில் கூடுதலான மாணவர்களும் குறைவான ஆசிரியர்களும் காணப்படுகின்றனர்.

பாடசாலை மாணவர்களில் கலை, வர்த்தக, உயிரியல், பௌதிக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் கல்வி பயில்கின்றனர். கடந்தசில வருடங்களாக க.பொ.த. (உ|த) கல்வியில் வர்த்தக கல்வியியல் வளர்ச்சி கண்டுள்ள போதிலும் பல்கலைக்கழக அனுமதியில் இத்துறையில் அனுமதிக்கப்படாதது ஒரு குறைபாடாகும். உயர்புள்ளிகள் பெற்ற மாணவர்கள் கூட வர்த்தகத்துறைக்கு அனுமதிக்கப்படாததை காண முடிகிறது. 1992-93 கல்வியாண்டில் 6000க்குமேற்பட்டவர்த்தக முகாமைத்துவ மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்திருந்த போதிலும், 1250 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றனர். இவர்கள் மொத்த அனுமதி கோரிய மாணவர்களில் மிகச்சிறிய பங்கே இதுவாகும். ஆனால் இதற்கு மாறாக 1992-93 கல்வியாண்டில் உயிரியல்துறைக்கு3000 மாணவர்கள் வரை பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் 2000க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு அனுமதி கிடைத்தது குறிப்பிடத்தக்கது. கடந்த சில வருடங்களாக கல்லூரிகளில் வர்த்தக மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும் பல்கலைக்கழகங்களில் உயிரியல் சார்ந்த பீடங்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக 1977க்கு பின்னர் 4 மருத்துவ பீடங்களும் 3 விவசாய பீடங்களும், 2 விஞ்ஞான பீடங்களும் புதிதாக அமைக்கப்பட்டன. மற்றும் பல்வைத்தியம், மிருக வைத்திய பீடங்களாக தரமுயர்த்தப்பட்டு விரிவுபடுத்தப்பட்டன. ஆகவே இடைநிலைக் கல்வி பயிலும் மாணவர்களும் பல்கலைக்கழக கல்வி முறைகளுக்குமிடையே வேறுபட்ட பண்புகள் காணப்படுவதை அவதானிக்கலாம்;

### தமிழ் மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதியும்

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் நீண்ட காலமாக தமிழ் மாணவர்கள், விஞ்ஞான, வர்த்தககற்கை நெறிகளில் கூடுதலாக கற்று வந்தனர். 1970களுக்கு முன்னர் பெரும்பான்மை நிலையிலும் இருந்தனர். 1970களிலிருந்து தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து 1980களின் நடுப்பகுதிகளிலேயே இலங்கையின் இனவிகிதாசார நிலைக்குக் கீழே போ

(11 ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உலகப் பெண்கள் தின போட்டி முடிவுகள்

எதிர்வரும் 08-ம் திகதி நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடாத்தப்பட்ட இலக்கிய, ஓவியப் போட்டி முடிவுகள்:

**சிறுகதை:**

முதலாம் இடம்: ''பள்ளி எழுந்திடுவீர்''
வேணி சின்னத்தம்பி, வினோத் வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

இரண்டாம் இடம்: ''நிமிர்வு''
அற்புதராணி காசிலிங்கம், மலரகம் 435 சங்கீதா வீதி, திருநெல்வேலி.

மூன்றாம் இடம்: ''மலர மறைந்த பூ''
மீனலோஜினி அருணாசலம், கிராம்புவில், சாவகச்சேரி.

**கவிதை:**

முதலாம் இடம்: ''புலரி தேடிடும் புரட்சிப் புறாக்கள்''
ஜெ. கவிதா, 'ஆனந்தவாசா' முதலியார் வளவு, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

இரண்டாம் இடம்: ''சிறையில் இருக்கும் தோழிக்கு''
பவானி அருளையா (ஆண்டு 12, வேம்படி மகளிர் கல்லூரி), 605 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாம் இடம்: ''கனவு சுமந்த கண்கள்''
செ. தயாளினி, மே/பா பொ. தெய்வேந்திரம், அம்பாள் றேடர்ஸ் ஆனந்தபுரம், கிளிநொச்சி.

**ஓவியம்:**

முதலாம் இடம்: இ. மயூரலதா
(மண்டைதீவு) மேஜர் செல்வராசா வீதி, கோண்டாவில் மேற்கு கோண்டாவில்.

இரண்டாம் இடம்: ஆன் சோபனா யேசுதாசன்
யா/திருக்குடும்பகன்னியர் மடம்.

மூன்றாம் இடம்: இ. மேனகா
(மண்டைதீவு) முத்தடி ஒழுங்கை கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

# அரசின் பயங்கரவாத செயலுக்கு கிழக்கு மக்கள் பாடம் புகட்டினர்

## உள்ளூராட்சி தேர்தல் குறித்து அமரசிறிதொடங்கொட

(கொழும்பு)

முன்னர் நடைபெற்ற தேர்தல்களில் இடம்பெற்ற ஊழல்களைப்போன்று தற்போது நடைபெறவுள்ள தேர்தல்களிலும் அரசாங்க பயங்கரவாதத்தையும் ஊழல்களையும் கட்டவிழ்த்துவிட தயாராக இருப்பதாகவும் இதற்குத் தென் மாகாணசபை வாக்காளர்கள்தான் தகுந்த பாடம் கற்பிக்கவேண்டும் எனவும் தென் மாகாணசபை பொதுஜன ஐக்கிய முன்னணியின் முதல் வேட்பாளர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

தென்மாகாணசபை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேற்படி கருத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்: கிழக்குமாகாணத்திலும், வவுனியா நகரசபை உள்ளூராட்சித் தேர்தலின் போதும் சகல அரசாங்க உடைமைகளை பயன்படுத்தியும், அரசாங்க பயங்கரவாதத்தை உச்சகட்டத்தில் பயன்படுத்தியும் பார்த்தது. அதனால் முழுமையான வெற்றியை ஐக்கிய தேசிய கட்சி அடையமுடியவில்லை. எனவே அப்பகுதி மக்கள் அரசாங்கத்தின் தமது முழுமையான எதிர்ப்பை காட்டியுள்ளனர்.

எனவே தென்மாகாண சபை மக்களும் முழுமையான ஓர் எதிர்ப்பை காட்டுவதன் மூலம் தென்மாகாணத்தின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படும் என்றார்.

# மெய்வல்லுநர் விதிகள் தொடர்பான கருத்தரங்கு

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்காக மெய்வல்லுநர் ஒழுங்கு விதிகள் பற்றிய தொடர் கருத்தரங்கு ஒன்றை யாழ். கல்வித் திணைக்களமும் யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கமும் இணைந்து நடத்தவுள்ளன.

யாழ்ப்பாணம் 'போஸ்கோ' நிறுவனத்தின் ஆதரவில் நடைபெறும் இந்தக் கருத்தரங்குத் தொடர் எதிர்வரும் 12-03-1994 சனிக்கிழமை முதல் தொடர்ந்து ஐந்து வாரங்களுக்கு இடம்பெறும்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரை யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும் இக்கருத்தரங்கில் மெய்வல்லுநர் விதிகளில் தேர்ச்சிபெற்ற விரிவுரையாளர்கள் கருத்துரை வழங்குவார்கள்.

மெய்வல்லுநர் விதிகளில் தேர்ச்சிபெற்ற உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்காக மாவட்ட ரீதியிலான பரீட்சை ஒன்று விரைவில் நடைபெறவிருக்கிறது. அதற்கு முன்னேற்பாடாகவே இந்தக் கருத்தரங்குத் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கருத்தரங்குத் தொடரில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை "உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) - கல்வி வலயம் - 1" - என்ற முகவரிக்கு எதிர்வரும் 10-ம் திகதிக்கு முன்னர் அனுப்பும்படி கேட்கப்பட்டிருக்கிறது.

# கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியில் கண்டெடுக்கப்பட்ட க. அகிலேஸ்வரி (யாழ்ப்பாணம்) என்பவருடைய சாதகக்குறிப்பொன்று ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

ஃ ஃ ஃ

28-2-94 அன்று விறான்லி கல்லூரி வீதியில் நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதற்குரியவர் ஆதாரம் காட்டி ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

# குடும்ப அட்டை

பதியப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் குடும்ப உறுப்பினர்கள் அனைவரினதும் பெயர்கள் முழுமையானதாகவும் பிறந்த திகதி, தொழில், தொழில்புரியும்இடம் என்பன கண்டிப்பாக பதியப்பட்டிருக்க வேண்டும் என போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் குடும்பப்பதிவு அட்டைப் பகுதியினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இத்தகைய சரியான முழுமையான விபரங்களைக் கொண்டிராத குடும்பப்பதிவு அட்டைகள் பாவனைக்கு ஏற்றுக்கொள்ளமுடியாதவையாகும். எனவே பாவனைக்கு உகந்தவையல்லாத குடும்பப் பதிவு அட்டைகளை தொடர்ந்து வைத்திருப்பதன் மூலம் நீங்கள் எதிர்நோக்கக்கூடிய சிரமங்களை தவிர்க்க எதிர்வரும் 15-04-94க்கு முன்னர் உங்கள் பதிவுகளை குடும்பப் பதிவு அட்டைச் செயலகங்களினூடாக சரிசெய்து கொள்ளுமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்பப் பதிவு அட்டை பகுதியினர் பொதுமக்களை கேட்டுக் கொள்கின்றனர்.

# திறந்த பல்கலைக்கழகத்தில் கற்கைநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்தினூடாக தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பயிற்சிநெறிக்கு ஏற்கனவே விண்ணப்பித்த மாணவர்கள் தமது பயிற்சி நெறியை தொடர விரும்பினால் மீண்டும் ஒரு தடவை பதிவு செய்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பயிற்சிநெறி எதிர்வரும் மே மாதம் யாழ். திறந்த பல்கலைக் கழகத்தில் ஆரம்பமாக உள்ளது. இதற்கான மீள் பதிவுகள் எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இக் கற்கைநெறி தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தம்முடன் உடனடியாகத் தொடர்புகொள்ளும்படி திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய இயக்குநர் திரு. ச. ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார். (உ)

# மீனவருக்கு நிவாரணம்

(வடமராட்சி)

கடல் வலயச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுவரும் மீனவர்களுக்கு இரண்டு கட்டம் மீனவர் நிவாரணம் அடுத்த வாரம் முதல் வழங்கப் படவுள்ளது.

இதற்கான அனுமதி பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குக் கிடைத்துள்ளது. இந்நிவாரணத்திற்கான உணவுப் பொருள்களும் கையிருப்பில் உள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 2500 குடும்பங்களுக்கு இந் நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலாளர் திரு. ஆ. சிவசாமி தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு பின்னர் இராணுவ நடவடிக்கையினால் மீன்பிடி உடைமைகளை இழந்த மீனவர்கள் பற்றிய விபரமும் சற்கோட்டை கிராம அலுவலர்களினால் சேகரிக்கப்பட்டு வருகிறது. (யோ)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி ச. ஜெயராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் பிரதம விருந்தினராகவும், உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. அருணகிரிராஜா, விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பொறுப்பாளர் செல்வி ம. வாசுகி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஃ ஃ ஃ

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி பாடசாலை அதிபர் திரு. செ. குபேரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் பிரதமவிருந்தினராக சங்கானை பிரதேச செயலர் திரு. கா. சந்திரராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. நற்பரானந்தன், மாணவரமைப்பைச் சேர்ந்த திரு. முருகன், வலிமேற்கு பிரதேச சபை செயலர் திரு. க. திரவியம் ஆகியோர் கலந்து கொள்வர். (11)

# இலங்கையில்

கும் போக்கு தென்படத் தொடங்குகின்றது. வடக்கிலும் கிழக்கிலும் இரண்டு பல்கலைக் கழகங்கள் அமைந்த போதிலும் கூட பல்கலைக் கழக அனுமதி மையப்படுத்தப்பட்டிருந்தமையால் அனுமதியில் இப் பல்கலைக்கழகங்களால் எதுவும் செய்யமுடியாது போய்விட்டது. எண்ணிக்கை ரீதியில் சில அதிகரிப்பு காணப்பட்டாலும் கூட ஒப்பீட்டு விகிதாசார ரீதியில் குறைந்தே உள்ளது. பாரம்பரியமாக கல்வியில் முன்னணி வகித்த யாழ். மாவட்டம் பழைய நிலையை தக்கவைக்க முடியாமல் உள்ளது. ஏனைய தமிழ் மாவட்டங்கள் கல்வி ரீதியில் முன்னேற்றம் காணப்பட முடியாதிருந்தமையால் மாவட்ட கோட்டா முறையில் அமைந்த சிறுசலுகை மூலம் சிறிய முன்னேற்றம் ஏற்பட்டதெனக் கொள்ள இடமுண்டு தமிழ் மாணவர்களின் கல்வி வீழ்ச்சியடைந்தமைக்குரிய பிரதான காரணிகள் யாவை-

1. 1970-1978 களில் அறிமுகப்படுத்தப்பட்ட மொழி வாரியான தரப்படுத்தலும் மாவட்ட கோட்டா முறையும்
2. தற்போதைய மாவட்ட கோட்டா முறை
3. தமிழ்ப்பகுதிகளில் கல்வி வளர்ச்சி அண்மையில் சில தசாப்தங்களாக பின்சென்றமை
4. மலையக மக்களின் உயர் வகுப்புக் கல்வி விரிவாக்கப்படாமை
5. சிங்கள மக்கள் மத்தியில் கல்வியில் ஈடுபாடுடைய மத்தியதர வர்க்கம் விரிவுபெற்றுச் செல்ல, அதை ஒத்த விரிவாக்கம் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படாமை
6. தமிழ் மக்களின் உள்நாட்டு சர்வதேச இடம் பெயர்வு
7. பல்கலைக்கழக அனுமதி முறைக்கேற்ப பாடசாலைகளில் பாடங்களை தெரிவு செய்வதில் உள்ள குறைபாடு உதாரணமாக மொழியியல் ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்றவற்றிற்குவிசேடமாக அனுமதிக்கப்படும் போதுகூட இத்தகைய பாடங்களை தமிழ் மக்கள் படிக்காததினால் அனுமதி கிடைக்கப்படுவதில்லை
8. மொழியியல் கல்விக்கு 100க்கு மேற்பட்ட மாணவர்கள் விசேட முறையில் அனுமதிக்கப்பட்ட போதிலும்தமிழ் மாணவர்கள் எவரும் எடுபடவில்லை அதற்குக் காரணம் இருமொழிகளைக் கற்றவர்களுக்கே இவ் அனுமதி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

ஒருநாட்டின் விருத்தியில் உயர்கல்வி ஒரு முக்கிய இடத்தை என்றுமில்லாத அளவிற்கு இன்று பெற்றுள்ளது. உலகில் எந்தவொரு நாடும் குறைந்த உயர்கல்வி வசதியுடனோ அல்லது குறைவான மாணவர்களைக் கொண்டு வளர்ச்சியடைந்தது கிடையாது. உலகார்ந்த ரீதியாக மூன்றாம் மட்ட கல்வி நிலையங்களே துரிதமாக வளர்ந்து செல்கின்றன உதாரணமாக ஜேர்மனியில் 1960இல் 200,000மாணவர்களே கல்வி கற்றார்கள். இன்று 1700000 மாணவர்கள் கல்விகற்கின்றார்கள். ஜேர்மனி 80 மில்லியன் மக்களைக் கொண்ட நாடு. இலங்கை 17.5 மில்லியன் மக்களைக் கொண்ட நாடு. இந்தக் குடித்தொகை விகிதாசாரத்தைக் கணிப்பிடின் 400000 மாணவர்கள் இலங்கையில் பல்கலைக்கழகங்களில் இருக்க வேண்டுமெனக் கொள்ள வேண்டும். ஆனால், எமது நாட்டில் 27000 மாணவர்களே கல்வி பயில்கின்றனர். இத்தொகையானது எந்த முறையில் பார்த்தாலும் குறைவென்றே கொள்ளலாம். எமது இனத்தின் வளர்ச்சிக்கு உயர்கல்வியை முன்னெடுப்பதும் கூடுதலான மாணவர்கள பலவழிகளில் உயர்கல்வியை நாட வைப்பதும் முக்கியமான கடமையாகும். உயர்கல்வியை நாம் தாமதம் செய்யின் அபிவிருத்தி பின் அடையும். எனினும் எமது நாட்டினதும் இனத்தினதும் தேவைகளுக்கு ஏற்ப கற்கைநெறிகள் மாற்றியமைக்கப்படுவதுடன் பொருத்தமான விழுமியங்கள் உட்புகுத்தப்படல் வேண்டும்.

# பரீட்சை

அரசாங்க மாகாண அரசாங்க சேவையின் பொது எழுதுநர் சேவையின் 11 வகுப்பின் 'அ' பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை எதிர்வரும் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதுஎன யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 3-3-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1066

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்!-

இல்லை:

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

26-4726, 26-3390, 27-9327, 41-5417, 24-9091, 24-3594, 26-6062, 28-1110, 26-4436, 42-5556, 41-9746, 28-6853, 27-3903, 24-3258, 26-560, 26-4874.

# தமிழ் மக்களுடன் பிரச்சினை இல்லை "பயங்கரவாதி"களுடனேயே போர்

## கனடிய அரசுக்கு சிறிலங்கா பதில்

தமிழ்மொழி பேசும் மக்களுடன் அரசாங்கத்திற்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை. எமது நடவடிக்கை ''பயங்கரவாதி''களுக்கு எதிரானதே என சிறிலங்கா அரசு கனேடிய அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளது. அங்குள்ள சிறிலங்கா தூதுவர் மூலம் இச் செய்தி விடுக்கப்பட்டுள்ளது.

கனடாவிலுள்ள சிறிலங்கா தூதுவராலய தகவல் வழங்கும் பிரதம அதிகாரி ரொரண்டோ ஸ்ரார்'' பத்திரிகை மூலம் வெளியிட்ட இந்த அறிக்கை கனடிய அதிகாரிகளின் முழுமையான அவதானிப்புக்கு உள்ளாகியுள்ளதாக ஏஜென்சி நிறுவனங்கள் கூறுகின்றன.

## தாதிகள் விஞ்ஞான மானி; பரீட்சை அனுமதி அட்டை

(யாழ்ப்பாணம்)

தாதிகள் விஞ்ஞான மானி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இக் கற்கை நெறிக்கு மேற்படி அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்றும் விண்ணப்பதாரிகளுக்கு உடனடியாகவே தகுதிகாண் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும் என்றும் திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ் பிராந்திய இயக்குநர் திரு. ச. ஆ. ஞானேந்திரன் தெரிவித்தார். (க)

## மனையியல் ஆசிரியர்கள் 15க்குமுன் விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

அரச பாடசாலைகளில் மனையியல் டிப்ளோமா உதவி ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி மார்ச் மாதம் 15ஆம் திகதி என யாழ். அரசஅதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

விவசாய டிப்ளோமாதாரர்களை உதவி ஆசிரியர்களாக நியமிப்பதற்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதியை நீடிக்குமாறும் அரச அதிபர் கல்விச் சேவை ஆணைக்குழுவை வேட்டுக்கொண்டுள்ளார்.

இதே சமயம் கணக்காய்வு பரீட்சை தரம் இரண்டுப் நியமிப்பதற்கான போட்டிகு பரீட்சை ஏப்ரல் 2ஆம் திகதி முதல் கொழும்பில் நடாத்த பரீட்சைகள் ஆணையாளர் தற்போது மீளஅட்டவணைப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வங்கி வெற்றிட அனுமதி அட்டை

மக்கள் வங்கிக்கான லிகிதர் சேவை, தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் போட்டிப் பரீட்சை அனுமதி அட்டை 'வாதுவ' கப்பலில் வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாதுவ கப்பல் எதிர்வரும் பதினைந்தாம் திகதி புறப்பட்டு பருத்தித்துறை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி பரீட்சை இம் மாத இறுதியில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## மெய்வல்லுநர் போட்டி

(சுன்னாகம்)

உடுவில் அ. மி. த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று பிற்பகல் 1. 30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது

அதிபர் திரு. கி. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கு உடுவில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. க. இரத்தினராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

## குண்டுச் சத்தங்கள்

நேற்று நண்பகல் 12-30 மணியளவில் பூநகரி- கல்முனைப் பகுதியில் பலத்த குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

அதேவேளை சிறிலங்கா கடற்படை பீரங்கிப் படகிலிருந்தும், உலங்கு வானூர்தியிலிருந்தும் பீரங்கிமற்றும் கவிபர் தாக்குதலை நடத்தியதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். (21)

அடுத்த

வாரத்தில் தெற்கில் நடைபெறவிருக்கும் தேர்தலில் என்ன பயனளிக்கப் போகிறது எனத் தெரியவரப்போகிறது. கடந்த ஓராண்டுக் காலத்தில்இரண்டாவதுமுறையாகத் தென் மாகாணத்தில் தேர்தல் நடைபெறவுள்ளது. இம்மாதம் தென்மாகாணத்தில் நடைபெறவுள்ள தேர்தலில் ஆளும்கட்சி நிராகரிக்கப்பட்டால் அது ஜனாதிபதிக்குச் சோதனையாக இருக்கும்: அவர் மீளவும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படும் வாய்ப்பை முற்றாக அழித்துவிடும் என்று மேலும் தெரிவித்தது.

பெண்கள்

முதல் மூன்று பரிசில்களைப் பெற்றோர் விபரங்கள் இதில் வெளியிடப்பட்டுள்ளன' இவ் விபரங்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன.

6000 கிலோ

வருவதை யாழ். அரசாங்க அதிபர் கொழும்பு உயர் அதிகாரிகளுக்கு சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து மேற்படி ஆறாயிரம் கிலோ மலத்தியோன் அனுப்புவதற்கு அதிகாரிகள் இணங்கியதாக தெரியவருகின்றது.

அடுத்ததாக வரும் கப்பலில் இதனை எடுத்துவருவதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், இது தற்போதைய உடனடி தேவைக்கு மட்டுமே பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் எனவும் தெரியவருகின்றது. (நி)

## பிரதிபொலிஸ்மாஅதிபர்கள் 12பேர் புதிதாக நியமனம்

புதிதாக் பன்னிரண்டு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்காக சுமார் 50இற்கும் மேற்பட்ட பொலிஸ்சுப்பிரிண்டன்கள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படவுள்ளனர். இவ்வாறு புதிதாகத் தெரிவு செய்யப்படும்பிரதிப்பொலிஸ் மா அதிபர்கள் நாட்டின் பல் வேறு பகுதிகளிற்கும் நியமிக்கப்படவுள்ளனர்.

## செயலகத்தில் விறகு விற்பனை

(யாழ்ப்பாணம்)

செயலகத்தில் தேங்கிக் கிடந்த விறகு நேற்று ஏலத்தில் விடப்பட்டது, செயலக ஊழியர்கள் மட்டுமே இவ் விறகினை ஏலத்தில் கேட்டு வாங்க அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு தேங்கிக் கிடந்த விறகானது அண்மையில் நடைபெற்ற செயலகம் மீதான விமானத் தாக்குதலினாலும் புயல் காற்றினாலும் முறிந்து விழுந்த மரங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்ப் பிரவேச பண்டித பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் க. பொ. த. உயர்தர மாணவருக்கான தமிழ்ப்பிரவேச பண்டித பரீட்சை ஒன்றை நடாத்தவுள்ளது.

மேற்படி சங்கத்தின் பிரவேச பண்டித, பாலபண்டித தமிழ்ப் பண்டித பரீட்சைகள் இவ்வாண்டுமே மாதத்தில் நடைபெறவுள்ளன. இவற்றில் பிரவேச பண்டித பரீட்சையின் பாடத்திட்டம் உயர்தரவகுப்பு மாணவர்க்கு ஏற்றவிதத்தில் திருத்தியமைக்கப்பட்டுப் பரீட்சை நடத்தப்படுவதால் பாடசாலை மாணவர் பலரும் வெளிமாணவரும் தோற்றலாம் எனவும் இவர்களுக்கு கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தோற்ற விரும்புவோர் மார்ச் 16-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## உடற்பயிற்சி

வேலணை - ஊர்காவற்றுறை கோட்ட மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டி நாளை காலை 8 30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கோட்டங்களின் பணிப்பாளரான திரு: சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

## ஒன்று கூடல்

''புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்மாதாந்தஒன்று கூடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு நல்லூரில் நடைபெறும். அனைத்து வானொலிக் கலைஞர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.


### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கட்டாக்காலி நாய் பிடிப்பவர் பதவி

(தரகு அடிப்படையில்)

இம் மாநகராட்சி மன்றத்தின் சுகாதாரப் பகுதியில் கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பவராகக் கடமை புரிவதற்கு விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பக்காரர் 40 வயதிற்குட்பட்டவராகவும், நல்ல தேக ஆரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

பிடிக்கப்படும் ஒவ்வொரு நாயையும் நீரில் அமிழ்த்திக் கொல்லல் வேண்டும். இதற்குத் தாங்கள் கோரும் கட்டணத்தை விண்ணப்பதாரர் தங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது வயது, அனுபவம் முதலியவற்றைக் குறிப்பிட்டு எழுத்துமூலம், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு 15-03-1994-ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12. 00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.

ஆணையாளர்,
மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
03-03-94

(சி-8764)

## பசன் கன்றுகள் முற்றிலும் இலவசம்

(Passion Fruit Plants)

ஜாம் மூடியுடன் 400g ஹொர்லிக்ஸ், வீவா போத்தல்களில் ஏதாவது ஐந்து (5) எம்மிடம் ஒப்படைக்கும் போது போத்தலுக்குரிய பணத்தைப் பெறுவதுடன் பசன் கன்று ஒன்றை முற்றிலும் இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள். இச் சலுகை கன்றுகள் உள்ளவரை மட்டுமே.

TASTE LINE INDUSTRIES (PVT) LTD.
No. 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- பசன் பழங்கள் நாம் கொள்வனவு செய்கின்றோம்.

(இ-8700)


## மரண அறிவித்தல்

### திருமதி இராசகோபாலபிள்ளை பராசக்தி

திருமதி இராசகோபாலபிள்ளை பராசக்தி 2-3-94ல் கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற கந்தையா இராசகோபாலபிள்ளையின் மனைவியும் காலம்சென்ற நா. சபாபதிப்பிள்ளை, திருமதி இராசம்மா சபாபதிப்பிள்ளை (அமெரிக்கா) ஆகியோரின் மகளும் சோமாவதி, சத்தியவதி, சுகுணவதி, காலம்சென்ற செல்வி இ: திலகவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் சதானந்தன் (கொழும்பு), சபாபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற வருமானவரி உத்தியோகத்தர்), கருணாநிதி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் வர்ணகுலசிங்கம், (கொழும்பு) சரோஜினிதேவி (இங்கிலாந்து), குலராஜசிங்கம் (கனடா), டாக்டர் குலோத்துங்கம் (அமெரிக்கா), ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகாந்தன், தேனுகா பிரியகாந்தினி, கோணேஷ், தேனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 3-3-94-ல் கொழும்பில் நடைபெற்றது. உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
13/2, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். — க. சபாபதிப்பிள்ளை (ஈழநாதம்.)

(சி-8766)


★ தரமான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கு சிறிபோட்டோ ★

(சி-8762)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திர வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.